



Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 271

திங்கட்கிழமை
25 ஓகஸ்ட் 2025

ஆவணி 09 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50


ரணில் விக்கிரமசிங்கவைப் போன்று

## வடக்கிலும் சில அரசியல்வாதிகளின் வாழ்வில் விரைவில் 'வசந்தம் வீசும்'!

சட்டத்தின் முன் அனைவரும் சமம்
கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகர் தெரிவிப்பு



**யாழ்ப்பாணம், ஓக.25**

**ரணில் விக்கிரமசிங்கவை நெருங்கமுடியாது என்று கூறிக்கொண்டிருந்தவர்கள் அவர் மீது சட்டம் பாய்ந்துள்ளதால் ஆட்டம் கண்டுள்ளனர். விரைவில் வடக்கில் ஊழல், மோசடிகளில் ஈடுபட்ட அரசியல்வாதிகள் சிலரின் வாழ்விலும் ரணில் விக்கிரமசிங்கவைப் போன்று வசந்தம் பிறக்கும் என்று நினைக்கின்றோம்.** 10

## செம்மணி மனிதப்புதைகுழி அகழ்வு இன்று மீள ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஓக.25
செம்மணி சித்துப்பாத்தி இந்து மயானத்தில் இனங்காணப்பட்ட மனிதப்புதைகுழியின் மூன்றாம் கட்ட அகழ்வு நடவடிக்கைகள் இன்று ஆரம்பிக்கப்படவுள் 11

## பொதுமக்களின் காணிகளை விடுவிப்பதே நிலைப்பாடு!

விரைவில் நடக்கும் என்கிறது அரசாங்கம்

யாழ்ப்பாணம், ஓக.25
வடக்கில் மக்களின் காணிகளை முழுமையாக விடுவிக்கும் நிலைப்பாட்டிலேயே ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க உள்ளார். தையிட்டி விகாரை 11

பதவிக்கு வந்து ஓராண்டு நிறைவு

## வடக்கில் பல திட்டங்களை ஆரம்பிக்க வருகிறார் அநுர



யாழ்ப்பாணம், ஓக.25
ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க ஆட்சிக்கு வந்து அடுத்த மாதம் ஒருவருடம் நிறைவடையவுள்ள நிலையில், எதிர்வரும் முதலாம் திகதி முதல் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை அரசாங்கம் செயற்படுத்தவுள்ளது.
இந்தச் செயற்றிட்டத்தின் 11

## ரணிலின் வீட்டிலிருந்தா பேசுகிறார் சுமந்திரன்?

அமைச்சர் பிமல் கேள்வி

கொழும்பு, ஓக.25
ரணில் விக்கிரமசிங்க கைதுசெய்யப்பட்டமை தவறு என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கூறியிருப்பது கவலையளிக்கின்றது. அவர் யாழ்ப்பாணத்தில் இருந்து பேசுகின்றாரா? அல்லது ரணிலின் வீட்டில் இருந்து பேசுகின்றாரா? 11



## வெளிநாடுகளின் அழுத்தம் ரணில் விடயத்தில் இல்லை

அமைச்சர் பிமல் தெரிவிப்பு

கொழும்பு, ஓக.25
இந்தியப் பிரதமர் மற்றும் மேற்குலக நாடுகளின் அழுத்தங்களாலேயே ரணில் விக்கிரமசிங்க மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார் எனக் கூறப்படுவதில் உண்மை இல்லை. ரணில் விவகாரத்தில் சட்டத்தின் படியே அரசாங்கம் செயற்படுகின்றது என்று சபை முதல்வரும், அமைச்சருமான பிமல் ரத்நாயக்க தெரிவித்துள் 11

## சைக்கிளில் சென்றவர் விபத்தில் உயிரிழப்பு!

கனகராயன்குளத்தில் சோகம்



வவுனியா, ஓக.25
வவுனியா, கனகராயன் குளம்,கொல்லர் புளியங்குளத்தில் நேற்று மதியம் நடந்த விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
கொல்லர் புளியங்குளத்தைச் சேர்ந்த முத்து ராமலிங்கம் (வயது-61) என்பவரே உயிரிழந்தவரா 11

## ரணில் விக்கிரமசிங்கவுக்காக கூட்டுச்சேர்ந்த எதிர்கட்சிகள்!

கொழும்பில் நேற்று ஊடக சந்திப்பு
அரசியல் பழிவாங்கல் எனக் குற்றச்சாட்டு

கொழும்பு, ஓக.25
முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரச நிதியை முறைகேடாகப் பயன்படுத்திய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நிலையில், அவரது கைதுக்கு எதிர்ப்புத் தெரிவித்து எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்துள்ளன. 11

## முக்கியமான நபர்கள் ஊடக சந்திப்பில் மாயம்

கொழும்பு, ஓக.25
முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கைதுசெய்யப்பட்டமைக்குக் கண்டனம் தெரிவித்து எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து ஊடக சந்திப்பை நடத்தியபோதும், நாட்டின் எதிர்க்கட்சித் தலை 10

## ரணிலின் உடல்நிலை சீராகவே இருக்கிறது

கொழும்பு தேசிய மருத்துவமனை பதில் பணிப்பாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஓக.25
கொழும்பு தேசிய மருத்துவமனையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ள முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் உடல்நிலை சீராக உள்ளது என்று கொழும்பு தேசிய மருத்துவமனையின் பதில் பணிப்பாளர் மருத்துவர் பிரதீப் விஜேசிங்க 11

## ரணிலின் கைதை எதிர்த்து குப்பைகளே சேர்ந்துள்ளன

அமைச்சர் பிமல் விமர்சனம்

வவுனியா, ஓக.25
ரணில் விக்கிரமசிங்கவின் கைதுக்கு எதிராகக் குப்பைகள் ஒன்றுசேர்ந்துள்ளன. கறுப்பு ஜூலை இனக்கலவரம், யாழ்ப்பாண நூலக எரிப்பு போன்ற சம்பவங்கள் நடந்தபோதே ரணில் விக்கிரமசிங்க கைதுசெய்யப் 11

### முச்சந்தி முரளி

'இப்ப ரணிலுக்காக உவையள் ஒன்டாகினமாதிரி தமிழரின்ர பிரச்சினையைத் தீர்க்கவும் ஒன்டாகினால் எவ்வளவு நல்லாயிருக்கும் கண்டியளோ'

## தெல்லிப்பழையில் விபத்து; முதியவர் ஒருவர் மரணம்!


விரிவு பக்கம்:- 11


## தபால் தொழிற்சங்கத்தின் போராட்டம் இடைநிறுத்தம்

கொழும்பு, ஓக.25
தபால் தொழிற்சங்கம் முன்னெடுத்து வந்த பணிப்புறக்கணிப்புப் போராட்டம் உடன் நடைமுறைக்கு வரும்வகையில் நேற்று இடைநிறுத்தப்பட்டது.
அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ 10




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | ஹந்தஹன ராசி சுப பலன் | NLB ஜய | மெகா பவர் | மஹஜன சம்பத | தன நிதானய | அத சம்பத | சுப தவசக் |
|---|---|---|---|---|---|---|---|
| திகதி 24.08.2025 | திகதி 24.08.2025 | திகதி 24.08.2025 | திகதி 24.08.2025 | திகதி 24.08.2025 | திகதி 24.08.2025 | திகதி 24.08.2025 | திகதி 24.08.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் 4173 | சீட்டிழுப்பு இலக்கம் 1240 | சீட்டிழுப்பு இலக்கம் 0199 | சீட்டிழுப்பு இலக்கம் 2279 | சீட்டிழுப்பு இலக்கம் 5931 | சீட்டிழுப்பு இலக்கம் 1961 | சீட்டிழுப்பு இலக்கம் 0506 | சீட்டிழுப்பு இலக்கம் 0047 |
| ஆங்கில எழுத்து P | வெற்றி இலக்கினம் தனுசு | ஆங்கில எழுத்து O | ஆங்கில எழுத்து I | ஆங்கில எழுத்து B | ஆங்கில எழுத்து Y | ஆங்கில எழுத்து B | வெற்றி இலக்கினம் ரிஷபம் |
| | | | சுப்பர் இலக்கம் 23 | | | | |
| வெற்றி இலக்கங்கள் 20 39 47 69 | வெற்றி இலக்கங்கள் 4 31 44 60 | வெற்றி இலக்கங்கள் 6 8 2 2 | வெற்றி இலக்கங்கள் 01 24 32 76 | வெற்றி இலக்கங்கள் 7 3 0 7 9 1 | வெற்றி இலக்கங்கள் 53 57 61 68 | வெற்றி இலக்கங்கள் 0 7 9 1 | வெற்றி இலக்கங்கள் 12 23 35 41 |
| விசேட எழுத்து P | | | | | விசேட எழுத்து Y | | |

# சர்வதேசப் பொறிமுறை ஊடாக இனவழிப்புக்கு நீதியை வழங்குக

## கரைச்சி, பச்சிலைப்பள்ளி, பூநகரி பிரதேசசபைகளில் தீர்மானம் நிறைவேற்றம்

யாழ்ப்பாணம், ஓக.25

**இலங்கையில் தமிழ்மக்கள்மீது மேற்கொள்ளப்பட்ட இன அழிப்பு நடவடிக்கைக்கு உள்நாட்டு விசாரணை நீதியைப் பெற்றுத்தராது. எனவே சர்வதேச விசாரணைப் பொறிமுறை ஒன்றை உருவாக்கவேண்டும் என கரைச்சி, பச்சிலைப்பள்ளி, பூநகரி ஆகிய பிரதேசசபைகளில் ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.**

ஜனநாயகத் தமிழ்த்தேசியக் கூட்டணியின் பங்காளி கட்சியான சமத்துவக் கட்சிப் பிரதேச சபை உறுப்பினர்களால் இந்தப் பிரேரணை முன்வைக்கப்பட்டது.

குறித்த பிரேரணையில குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

இலங்கையில் வாழ்கின்ற சிறுபான்மை இனமான தமிழ் இனம் மீது இலங்கை சுதந்திரம் அடைந்த காலம் தொட்டு மாறி மாறி ஆட்சிக்குவந்த அரசுகள் 2009 வரை மேற்கொண்டது ஓர் இனவழிப்பு நடவடிக்கையே. அதன் உச்சக்கட்டமாக 2009 இறுதிப்போரில் மிகக் கொடூரமான இனவழிப்புப் போரில் பல ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் கொல்லப்பட்டார்கள். அத்தோடு ஆயிரக்கணக்கானோர் காணாமல் ஆக்கப்பட்டுள்ளார்கள். தமிழ் மக்களின் பூர்வீகப் பிரதேசங்களான வடக்கு- கிழக்கில் பல இடங்களில் பெரும் மனிதப் புதைகுழிகள் காணப்படுகின்றன. அதன் ஒரு பெரும் சாட்சியாக செம்மணி மனிதப் புதைகுழி உள்ளது.

எனவேதான் தமிழ்மக்கள்மீது மேற்கொள்ளப்பட்ட இன அழிப்பு நடவடிக்கைக்கு உள்நாட்டு விசாரணைகள் நீதியை பெற்றுதராது. ஆகவே சர்வதேச சமூகம் குறிப்பாக ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவை என்பன சர்வதேச விசாரணை பொறிமுறையை உருவாக்கித் தமிழ் மக்கள்மீது மேற்கொள்ளப்பட்ட இன அழிப்பு நடவடிக்கைக்கு நீதியைப் பெற்றுத்தரவேண்டும் - என்றுள்ளது. (ச-214)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி 24.08.2025 | தினம் ஞாயிற்றுக்கிழமை | வெற்றி வாரம் 0639 |
| ஆங்கில எழுத்து R | வெற்றி இலக்கம் 5 7 8 1 7 7 | |

| Super Ball | | |
|---|---|---|
| திகதி 24.08.2025 | தினம் ஞாயிற்றுக்கிழமை | |
| சீட்டிழுப்பு வாரம் 2905 | ஆங்கில எழுத்து T | வெற்றி இலக்கம் 02 44 47 74 |

| சனிதா | | |
|---|---|---|
| திகதி 24.08.2025 | தினம் ஞாயிற்றுக்கிழமை | |
| ஆங்கில எழுத்து I | வெற்றி இலக்கம் 17 26 36 70 | வெற்றி வாரம் 5066 |

| SASIRI | | |
|---|---|---|
| திகதி 24.08.2025 | தினம் ஞாயிற்றுக்கிழமை | |
| வெற்றி வாரம் 0755 | வெற்றி இலக்கம் 14 33 40 | |

| லக்ன ராசி | | |
|---|---|---|
| திகதி 24.08.2025 | தினம் ஞாயிற்றுக்கிழமை | |
| கும்பம் | வெற்றி இலக்கம் 12 22 23 60 | சீட்டிழுப்பு வாரம் 4617 |

| KAPRUKA | | | |
|---|---|---|---|
| திகதி 24.08.2025 | தினம் ஞாயிற்றுக்கிழமை | | |
| ஆங்கில எழுத்து O | சுப்பர் இலக்கம் 12 | வெற்றி இலக்கம் 23 24 45 67 | வெற்றி வாரம் 2081 |


| அத கோடிபதி | | |
|---|---|---|
| திகதி 24.08.2025 | தினம் ஞாயிற்றுக்கிழமை | |
| ஆங்கில எழுத்து O | வெற்றி இலக்கம் 02 09 20 75 | வெற்றி வாரம் 2731 |

# சமன் ஏக்கநாயக்கவிடமும் விசாரணைகள் ஆரம்பம்!

கொழும்பு, ஓக.25

முன்னாள் ஜனாதிபதி செயலாளர் சமன் ஏக்கநாயக்க தொடர்பிலும் தற்போது விசாரணைகள் நடைபெற்றுவருவதாக பொலிஸ் சட்டப் பிரிவின் பொறுப்பாளரான பிரதிப் பொலிஸ் மா அதிபர் காலிங்க ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

கைதுசெய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெளிநாட்டுப் பயணத்திற்கான நிதியை அங்கீகரித்தமை குறித்து அவரிடம் விசாரணைகள் இடம்பெறுகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



# ரணிலின் கைது நடவடிக்கை அரசியல் திசைதிருப்பல்

## திலித் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஓக.25

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டிருப்பது இலங்கையின் அரசியலை வேறு திசையில் கொண்டு செல்வதற்கான முன்னெடுப்பாகும் என சர்வஜன அதிகாரம் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திலித் ஜயவீர தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சிறைச்சாலை மருத்துவமனையில் சந்தித்த பின்னர் அவர் இதனைத் தெரிவித்தார்.

'எனது அரசியற் கணிப்பின்படி, இது எமது நாட்டின் அரசியலை ஒரு புதிய திசையில் கொண்டுசெல்லும் ஒரு சம்பவமாகவே உள்ளது. ரணில் விக்கிரமசிங்கவின் அரசியற் கொள்கையுடன் நாம் இணங்கவில்லை என்றாலும், நாட்டின் முன்னாள் ஜனாதிபதியொருவர் இவ்வாறு நடத்தப்படுவது தவறாகும் - என்றார். (ச-இ)

# நீதித்துறைச் செயற்பாடுகளில் அரசு தலையிடவில்லை

## அமைச்சர் நளிந்த தெரிவிப்பு

கொழும்பு, ஓக.25

அரசாங்கம் எந்தவொரு நீதிமன்ற நடவடிக்கைகளிலும் தலையிடவில்லை என்று சுகாதார மற்றும் ஊடகத்துறை அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கைது குறித்து யூரியூபர் ஒருவர் முன்கூட்டியே தெரிவித்த கருத்துகள் தொடர்பில் செய்தியாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அனைத்து நிறுவனங்களும் சுயாதீனமாக விசாரணைகளை மேற்கொள்ள இடம் வழங்கப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்குத் தேவையான வசதிகளை வழங்குவது மட்டுமே அரசாங்கத்தின் பொறுப்பு. நிதி மோசடி, குற்றம் அல்லது ஊழல் என எதுவாக இருந்தாலும், விசாரணைகள் தலையீடு இல்லாமல் சுதந்திரமாக நடத்தப்படுகின்றன. சட்டம் அனைவருக்கும் சமமாகப் பொருந்தும் என்பதற்கு இந்த வழக்கை ஓர் உதாரணமாகக் காணலாம் - என்றார். (ச-இ)

# சிறுபிள்ளைத்தனத்தை அரசாங்கம் கைவிடவும்

## மனோ கணேசன் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஓக.25

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான அரசியல் பழிவாங்கல் நடவடிக்கையை அரசாங்கம் கைவிடவேண்டும் என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.


கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக நிகழ்த்தப்பட்டுக்கொண்டிருக்கும் பழிவாங்கல் செயற்பாட்டைக் கூட்டு எதிரணியாக நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராகப் பட்டலந்த வதை முகாம் குற்றச்சாட்டு, மத்திய வங்கிப் பிணை முறிமோசடிக் குற்றச்சாட்டு என்பவற்றை மக்கள் முன்வைத்து, இவற்றுக்கு எதிராக நடவடிக்கை எடுப்போம் எனக் கூறித்தான் தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்தது. அதைச் செய்யுங்கள்.

ஆனால் தற்போது ஜனநாயகம் குறித்துக் கேள்வி எழுந்துள்ளது. பணத்தை மீளக்கோரி ரணிலுக்கு கடிதம் அனுப்பி இருக்கலாம். அவர் மீளச் செலுத்தி இருக்காவிட்டால் நடவடிக்கை எடுத்திருக்கலாம். எனவே இது அரசியல் பழிவாங்கல் நடவடிக்கையாகும் - என்றார். (ச-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கிராமிய அபிவிருத்தித் திட்டத்துக்கு 700 மில்லியன் நிதி விடுவிப்பு

**கொழும்பு, ஓக.25**

**கிராமிய அபிவிருத்தித் திட்டங்களுக்காக இதுவரை சுமார் 700 மில்லியன் ரூபா நிதி விடுவிக்கப்பட்டுள்ளதாக கிராமிய அபிவிருத்தி மேம்பாடு, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சு தெரிவித்துள்ளது.**

இதுதொடர்பில் அமைச்சின் செயலாளர் சம்பத் மந்திரி நாயக்க தெரிவிக்கையில், இந்த ஆண்டுக்கான கிராமிய அபிவிருத்தி திட்டங்களுக்கான நிதி இம்மாத இறுதிக்குள் பிரதேச செயலாளர்களுக்கு விடுவிக்கப்படும். நிதியைப் பெற்ற பிரதேச செயலாளர்கள் திட்டங்களை உடனடியாக செயற்படுத்தத் தொடங்கியுள்ளனர்.

இதேவேளை 100 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான மதிப்புள்ள கிராமிய அபிவிருத்தித் திட்டங்கள் தற்போது நடைபெற்றுவருகின்றன. அனைத்துத் திட்டங்களிலும் நிலையான முன்னேற்றத்தை உறுதிசெய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் - என்றார். (ச-இ)

## காணாமற்போனோர் பற்றிய அலுவலகப் பிரதிநிதிகள் சோமரத்னவுடன் சந்திப்பு

கொழும்பு, ஓக.25

கிருஷாந்தி குமாரசுவாமி படுகொலை வழக்கில் மேல் நீதிமன்றத்தினால் பிரதான குற்றவாளியாகப் பெயரிடப்பட்டு, மரணதண்டனை விதிக்கப்பட்ட லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்சவை காணாமற்போனோர் பற்றிய அலுவலகத்தின் பிரதிநிதிகள் கடந்தவாரம் சிறைச்சாலையில் சந்தித்தனர்.

இதன்போது அவர் வெளிப்படுத்தவிருப்பதாக அறிவித்த விடயங்கள் தொடர்பில் கேட்டறிந்துகொண்டனர்.

இதன்போது கிருஷாந்தி குமாரசுவாமி மற்றும் அவரது குடும்பத்தாரின் படுகொலையில் தனது வகிபாகம், 1996 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் 'தலையாட்டிகள்' மூலம் நபர்கள் அடையாளங்காணப்பட்டு கைதுசெய்யப்படல் என்பன உள்ளடங்கலாகப் பல்வேறு விடயங்கள் தொடர்பில் சுமார் ஒருமணிநேரத்துக்கும் மேல் விபரித்தார் என காணாமற்போனோர் பற்றிய அலுவலகப் பிரதிநிதிகள் தெரிவித்தனர். (ச-இ)

## வெப்பம் உக்கிரம்

கொழும்பு, ஓக.25

நாட்டின் பல பகுதிகளில் மனித உடலால் உணரக்கூடிய வெப்பம் அதிகரித்துக் காணப்படும் எனவும் அதுதொடர்பில் கவனம் செலுத்த வேண்டும் என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

வடக்கு, வடமத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களிலும், மொனராகலை மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களிலும் இந்த நிலைமையை எதிர்பார்க்கலாம்.

குறித்த பகுதிகளில் வெப்பநிலை 39 முதல் 45 டிகிரி செல்சியஸ் வரை இருக்கும். இந்த நிலைமைகளைத் தவிர்க்க, அதிக தண்ணீர் பருகவேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ச-இ)

## கூலர் விபத்து; சாரதி காயம்!

கிளிநொச்சி, ஓக.25

மீன் ஏற்றிச்சென்ற கூலர் வாகனம் விபத்துக்குள்ளானதில் மீன்கள் நடுவீதியில் சிதறுப்பட்டுக் காணப்பட்டன.

இந்த விபத்து நேற்று அதிகாலை ஏ-9 வீதி முறிகண்டியில் இடம்பெற்றுள்ளது.

வேகக் கட்டுப்பாட்டை இழந்த கூலர் வாகனம் வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியுள்ளது. இதில் சாரதி காயங்களுடன் மீட்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ச-113)

## அரச மருத்துவர்கள் இன்று வேலைநிறுத்தப் போராட்டத்தில்

கொழும்பு, ஓக.25

அரச மருத்துவ அதிகாரிகள் சங்க உறுப்பினர்கள் இன்று திங்கட்கிழமை காலை வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடத் தீர்மானித்துள்ளனர் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

மருத்துவர்களின் இடமாற்றங்கள் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து இந்த வேலைநிறுத்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# தனிக்கட்சி ஆட்சிக்கு ஜே.வி.பி. முனைப்பு!

### சம்பிக்க சுட்டிக்காட்டு

கொழும்பு, ஓக.25

தனிக்கட்சி ஆட்சி முறைமையை ஏற்படுத்துவதற்கு ஜே.வி.பி. முயற்சித்துவருகின்றது. இதற்கு எதிராக அனைவரும் அணிதிரள வேண்டும் என்று முன்னாள் அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

1982 இல் அரச சொத்துகளுக்குக் கட்சியொன்று சேதம் விளைவித்ததால்தான், சட்டநடவடிக்கையின் நிமித்தம் பாதுகாப்புச் சொத்துச் சட்டம் கொண்டுவரப்பட்டது. 2022 இல் நாடாளுமன்றத்தைக் கொளுத்துவதற்காக வீதியில் இறங்கிய கட்சிதான், பொதுச் சொத்துச் சட்டத்தின்கீழ் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைக் கைது செய்துள்ளது. எனவே, அரசியல் வேறுபாடுகள் இருப்பினும், ஜனநாயகத்தை மதிக்கும் அனைத்துத் தரப்பினரும் இதற்கு எதிராக அணிதிரளவேண்டும் - என்றார். (ச-44)

## பதவி படுத்தும் பாடு

**ஆசை வெக்கமறியாதது. அதிலையும் பதவியாசை கான்சர் மாதிரி, தொத்தினால் ஆளை விட்டுப் போறது கஷ்டம். அதிலையும் கனகாலம் பதவிக் கதிரையில இருந்து ருசி கண்ட பூனையள், திரும்பத் திரும்ப அந்தக் கதிரையில தாங்கள் மட்டும்தான் இருக்கவேணும் எண்டு ஆசைப்படுவினம். ஆனால் எல்லாத்துக்கும் ஒரு அளவு இருக்குத்தானே. வயசு போனபிறகு அடுத்தவைக்கு அந்தப் பதவியைக் குடுக்கவும் சிலருக்கு மனசு வராது. அதால என்ன செய்வினம் எண்டால், தங்கட வீட்டில இருக்கிற ஒராளை ஒருநப்பர்ஸ்ராம்ப் மாதிரி அந்தப் பதவியில இருத்திப்போட்டு, தாங்கள் பின்னால நிண்டு ஆட்டுவிப்பினம். பதவி இல்லாட்டியும் அதின்ர அதிகாரம் இவையின்ர கையிலதான் இருக்கும். கூடுதலா மக்கள் சேவை செய்யிற அமைப்புகளில இப்ப உந்தப் பதவியாசை கனபேரைக் கான்சர் மாதிரிப் பிடிச்சு வைச்சு கண்டபடி ஆட்டுவிக்குதாம்.**

**முதலுதவி செய்யிறதிலையும், அம்புலன்ஸ் சேவை வழங்கிறதிலையும் உலக அளவில பேமஸான அமைப்புக்கு இஞ்ச யாழ்ப்பாணத்திலையும் கிளை இருக்கு. மற்ற இடங்களில எல்லாம் பக்குவமா இருக்கிற இந்த அமைப்பு, யாழ்ப்பாணத்தாரின்ர கைபட்டால் எப்பிடி மாறும் எண்டு தெரியும்தானே. குரங்கு கை பூமாலை மாதிரி 'அம்புலன்ஸ்' சேவையை வழங்கிற, ப்ளக் அண்ட் வைட் சீருடை போடுற அந்த அமைப்பின்ர யாழ்ப்பாணத்துக் கிளைக்கு பொறுப்பா 25 வருசத்துக்கும் மேல பதவியில இருந்தவர், கொஞ்சநாளைக்கு முதல்தான் அந்தப் பதவியில இருந்து இறங்கியிருக்கிறார். ஆனால் அவரை அந்தப் பதவியில இருந்து தூக்கிறதுக்குள்ள கொழும்பில இருக்கிற தலைமையகத்துக்கு சீவன் போனமாதிரி 'சீயெண்டு' போட்டுதாம். அந்தளவுக்கு பதவியை விடாமல் அவர் கட்டிப்பிடிச்சுக் கொண்டு இருந்திருக்கிறார். அறுபது வயது வந்தவுடன அப்பிடி மாவட்டக்கிளைக்கு பொறுப்பா இருக்கேலாது எண்டது அந்த அமைப்பின்ர சட்டம். ஆனால் இந்த முன்னாள் பொறுப்பாளர், ஒவ்வொரு வருசமும் ஏதோ ஒரு காரணம் காட்டி, மேலிடத்துக்குக் கடிதங்கள் எழுதி எப்பிடியோ பதவியை விடாமல் பிடிச்சு வைச்சிருந்தார். ஆனால் எவ்வளவு காலம்தான் மேலிடம் இவரையே பதவியில வைச்சிருக்க முடியும்? அதால எழுபது வயது வந்தவுடன, புதிசா ஒருத்தர்தான் பதவியில இருக்கோணும் எண்டு மேலிடம் இறுக்கமாச் சொல்லிப்போட்டுது.**

**அதுக்கும் அவர் ஒரு பிளான் வைச்சிருந்தவர். தன்ர துணைவியைப் பொறுப்பாளர் பதவியில இருத்திப்போட்டு, தான் பின்னால நிண்டு அமைப்பை இயக்க நினைச்சிருக்கிறார். ஆனால் அவரின்ர கனவில மண்ணள்ளிப் போடுற மாதிரி, பொறுப்பாளரின்ர துணைவியாரை விட்டிட்டு வேற ஒருத்தரை அந்தப் பதவிக்கு மேலிடம் போட்டிட்டுது. அதால கடுப்பான உந்த முன்னாள் பொறுப்பாளர், தன்ர பதவியையும், அமைப்பின்ர பொருள்களையும் புதிசா வந்தவரிட்ட ஒப்படைக்காமல் இழுத்தடிச்சு, பொலிஸ் கேஸ் வரை போய் அதுக்குப் பிறகுதான் மனமில்லாமல் மேலிடம் குடுத்த அழுத்தத்தால கையளிச்சிருக்கிறார். அதுக்குப் பிறகும் ஆள் சும்மா இருக்கேலையாம். இப்ப அந்த அமைப்பைப் பற்றி குறைசொல்லுறதும், அமைப்பில இருக்கிறவையைப் பற்றி மொட்டைக்கடிதம் போடுறதும், பள்ளிக்கூடங்களுக்கு அந்த அமைப்புக் குடுக்கிற முதலுதவிப் பயிற்சியைக் குழப்பிறதும் எண்டு ஓயாத அலையா குடைச்சல் குடுத்துக்கொண்டே இருக்கிறாராம். பொது அமைப்புகளையெல்லாம் இப்பிடியான சிலர் ஏதோ தங்கட குடும்பச் சொத்துமாதிரி நினைச்சு, அதில கிடைச்ச பதவி ருசியைக் காலம் முழுக்க தாங்கள் மட்டும் அனுபவிக்க நினைக்கிறதாலதான் நாங்கள் இப்பிடி சீரழியிறம் கண்டியளோ.**

- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** சிறிய அளவில் உடல்நலம் பாதிக்கப்பட்டாலும், எளிய சிகிச்சையினால் உடனே சரியாகிவிடும். உறவினர்களுடன் கருத்துவேறுபாடுகள் ஏற்படக்கூடும் என்பதால், பொறுமை அவசியம். குடும்பப் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காக வெளியில் அலையவேண்டிவரும்.

**இடபம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உடல் ஆரோக்கியத்தில் கவனம்தேவை. குடும்பத்தில் உறவினர்களால் செலவுகள் ஏற்பட்டாலும் அதனால் மகிழ்ச்சியே ஏற்படும். தாய்வழி உறவினர்களிடம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும். பிள்ளைகளை அனுசரித்துச் செல்லவும்.

**மிதுனம்:** தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக் கொள்வார்கள். அவர்கள் கேட்டதை வாங்கிக் கொடுப்பீர்கள். சிலருக்கு எதிர்பாராத செலவுகளால் கையிருப்புக் குறையக்கூடும்.

**கடகம்:** சகோதரவகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும். தந்தையிடம் எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். . வாழ்க்கைத் துணையின் தேவையைப் பூர்த்திசெய்வீர்கள். வெளியூரில் இருக்கும் நண்பர்கள் மூலம் மகிழ்ச்சிதரும் செய்தி கிடைக்கும்.

**சிம்மம்:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். உறவினர்கள் உதவியுடன் சுபநிகழ்ச்சிக் கான பேச்சுவார்த்தை சாதகமாக முடியும். நீண்டநாள்களாக எதிர்பார்த்த பணம் இன்று கிடைக்கும். கணவன் மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த பிணக்குகள் நீங்கும். வீண் விவாதங்களில் ஈடுபடவேண்டாம்.

**கன்னி:** மனதில் சிறுசிறு குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். இன்று குடும்பம் தொடர்பான முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும். எதிர்பாராத செலவுகளால் கடன்வாங்கநேரிடும். தாயின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். பிள்ளைகள் நீண்டநாள்களாகக் கேட்டதை வாங்கிக் கொடுப்பீர்கள்.

**துலாம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. மற்றவர்களால் மறைமுகத் தொல்லைகளும், விமர்சனங்களும் ஏற்படக்கூடும். குடும்பம் தொடர்பான முடிவு எடுப்பதாக இருந்தால் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து எடுப்பது நல்லது.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகள் வெற்றிகரமாக நிறைவேறும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் விலகும். சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். முடிவு எடுப்பதற்கு உகந்த நாள். சுபநிகழ்ச்சிகளுக்கான பேச்சுவார்த்தை சாதகமாகும்.

**தனுசு:** சாதிக்கும் நாளாக அமையும். வாழ்க்கைத்துணைமூலம் எதிர்பாராத பொருள் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள்.

**மகரம்:** கணவன் மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த கருத்துவேறுபாடு நீங்கி, அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளுக்காக செலவுசெய்யநேரும். வயிறு தொடர்பான பிரச்சினை ஏற்படக்கூடும் என்பதால், உணவு விஷயத்தில் கவனம் தேவை.

**கும்பம்:** உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். உறவினர்களிடம் இருந்து எதிர்பார்த்த உதவி கிடைப்பது இழுபறியாகும். மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

**மீனம்:** உறவினர்கள்வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உள்ளது. உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.

# பிறந்த எண் பலன்கள்

ஜோதிட ரீதியாகப் பார்க்கும்பொழுது ஒவ்வொரு எண்ணில் பிறந்தவர்களுக்கும் ஒவ்வொரு குணம் உண்டு. அந்தந்த எண்ணிற்கேற்ப அவரவரின் இயல்புகளும் அமைந்திருக்கும். ஒன்றாம் எண்ணிலிருந்து 31ஆம் எண்வரை எந்த எண்ணில் பிறந்திருந்தாலும் அதன் கூட்டுத்தொகையானது ஒன்றிலிருந்து 9 வரையே இருக்கும்.




இராகு பகவானின் ஆதிக்கத்திற்குரிய எண்ணான 4ஐப் பற்றிப் பார்ப்போம். சூரியனின் எண்ணான முதலாம் எண்ணைச் சார்ந்தே இதன் பலன்களும், நடைமுறைகளும், அதிர்ஷ்டங்களும் உள்ளன. மேலும் முதலாம் எண்ணிற்கு மிகவும் நட்புடையதாகவும் விளங்குகிறது. வெளிநாட்டு எண்கணித மேதைகள் இதை (4 எண்) யுரேனஸ் எனும் கிரகத்தின் ஆதிக்கத்தின் கீழ் இருப்பதாகக் கூறுகிறார்கள். இவர்கள் வாய்ப்பேச்சில் இன்பம் காண்பவர்கள். நாவன்மை அதிகமுள்ள இவர்கள் வீட்டிலும், டீக்கடைகளிலும், கோவில்களிலும் ஆற்றங்கரையிலும், கடற்கரையிலும், கையை ஆட்டி, குரலை ஏற்றி, இறக்கி, உணர்ச்சியுடன் பேசி மக்கள் மனதைக் கவருவார்கள். பல மணி நேரம் பேசும் இயல்பினர். ஒரு ஜனக்கூட்டம் எப்போதும் இவர்களைச் சுற்றியே நிற்கும்.

இவர்கள் இரகசியங்களைக் காப்பாற்றமாட்டார்கள். எந்த ஒரு விஷயத்தையும், வேலையையும், அடுத்தவரிடம் சொல்லிப் புலம்பாது இருக்கமாட்டார்கள். இவர்களிடமிருந்தே திட்டத்தை அறிந்து கொண்ட இவர்களது நண்பர்கள் அந்தத் திட்டத்தை அவர்களே விரைந்து சென்று செயலாற்றி, வெற்றி பெற்று விடுவார்கள். எனவே இவர்கள் அதிர்ஷ்டமான வாழ்க்கை வாழ வேண்டுமானால் முதலில் நாகாக்கவேண்டும்.

மேலும் 13 எண் பெயரில் வரும் அன்பர்கள் தங்களது வாழ்க்கையில் பல ஜீவ மரணப் போராட்டங்களை அவசியம் சந்தித்துத்தான் ஆகவேண்டும். பெரும்பாலும் 4, 13, 22, 31 ஆகிய திகதிகளில் பிறந்த அன்பர்கள் அயராது உழைத்திட்டபோதிலும், ஏனோ மேலதிகாரிகளால் வெறுக்கப்படுகிறார்கள். அடிக்கடி இவர்கள் வீண் பழிகளைச் சந்திக்கின்றார்கள். பலர் திடீரெனத் தாழ்ந்து விடுவார்கள். பிறரால் வஞ்சிக்கப்படுவார்கள். இவை அனைத்தையும் இவர்களிடம் அன்பு பாராட்டியவர்களே செய்து விடுவார்கள் என்பது வேதனையான விஷயம். இந்த எண்ணின் தொடர்புடையவர்களின் வாழக்கையானது எவ்வளவு வேகமாக உயர்கிறதோ, அதே வேகத்தில் திடீரெனத் தாழ்ந்து விடும் என்பதையும் மறக்கக்கூடாது!

இவர்கள் தங்களது மேலதிகாரிகள், முதலாளிகளின் ஆலோசனைக்குக் கட்டுப்பட விரும்பமாட்டார்கள். தன்மான உணர்வு மிகுந்த இவர்கள், அடுத்தவர்களுக்கு அடிமையாக இருந்து முன்னேறுவதைவிட அந்த வேலையை விட்டு விலகி ஏதாவது செய்து பிழைத்துக் கொள்ளலாம் என்று எதிர்த்து நிற்பார்கள். எனவேதான் இவர்களுக்குப் பல பிரச்சினைகளும், முன்னேற்றத் தடைகளும், தொழிலில் உண்டாகின்றன. தங்களது மேலதிகாரிகள், முதலாளிகள் போன்றோர்களை அனுசரித்துச் சென்றால் இவர்களும் மிகுந்த முன்னேற்றம் பெறலாம்.

எல்லா இடங்களிலும் தங்கள் கருத்துகளையே நிலைநிறுத்த முயற்சிப்பார்களேதவிர பிறருடைய கருத்தை செவி கொடுத்தும் கேட்கமாட்டார்கள். திடீர் அதிர்ஷ்டங்களைக் காட்டிலும் உழைத்து முன்னேறுவதிலேயே அதிக விருப்பம் கொண்டவர்கள். இவர்கள் நல்ல உழைப்பாளிகள் என்பதால் உடல் சோர்வு, முதுகுத் தண்டு வலி, மூட்டுவலி போன்றவை ஏற்படும். மன உளைச்சல் அதிகம் இருக்கும். தேவையற்றவைகளுக்கெல்லாம் குழம்பிக் கொள்வார்கள்.

**குடும்ப வாழ்க்கை:** நான்காம் எண்ணுரிக்குரியவர்கள் குடும்ப வாழ்க்கை ரீதியாக அதிர்ஷ்டசாலிகள் என்றே கூறலாம். ஏனெனில் இவர்களுக்கு இளம் வயதிலேயே திருமணம் நடைபெற்று விடக்கூடிய சூழ்நிலைகள் மிக அதிகம். இதனால் இவர்களுக்கு குடும்பத்தை நடத்தக்கூடிய பொறுப்பு வந்து விடுகிறது.

**பொருளாதாரம்:** நான்காம் எண்ணில் பிறந்தவர்களுக்குப் பணம் எப்போதுமே பற்றாக்குறையாகத்தான் இருக்கும். எவ்வளவுதான் சம்பாதித்தாலும் அதற்கேற்ற செலவுகளும் உண்டாகும் என்றாலும் இவர்கள் செய்யும் செலவு வீண் செலவாக இருக்காது. தாராள மனம் கொண்டவர்கள் என்பதால் யாராவது கஷ்டத்தை சொல்லி உதவி கேட்டால் கையில் இருப்பதை கொடுத்து விடுவார்கள். சொந்தச் செலவுக்காக திண்டாட வேண்டியிருக்கும் என்றாலும் எதையும் துணிவுடன் சமாளிக்கும் ஆற்றலும் இருக்கும்.

**அதிர்ஷ்ட திகதி. 4,13,22,31 அதிர்ஷ்ட நிறம் - மஞ்சள், அதிர்ஷ்ட திசை- கிழக்கு, அதிர்ஷ்ட கிழமை - ஞாயிறு அதிர்ஷ்ட கல் - கோமேதகம், அதிர்ஷ்ட தெய்வம் துர்க்கை**

## மாவீரன் பண்டாரவன்னியனின் 222 ஆவது ஞாபகார்த்த விழா

வவுனியா, ஓக.25

தேசிய மாவீரன் பண்டாரவன்னியனின் 222ஆவது ஞாபகார்த்த விழா வவுனியா மாநகரசபை முதல்வர் சு.காண்டீபன் தலைமையில் இன்று திங்கட்கிழமை காலை 9மணிக்கு வவுனியா மாவட்டச் செயலக தேசிய மாவீரன் பண்டாரவன்னியன் சதுக்கத்தில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் முதன்மை விருந்தினர்களாக நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளூராட்சிமன்றத் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள், வவுனியா மாவட்டச் செயலர், மேலதிக மாவட்டச் செயலர், முன்னாள் மக்கள் பிரதிநிதிகள், பிரதேச செயலாளர்கள், உதவிப் பிரதேச செயலாளர்கள், மாவட்டத் திணைக்களத் தலைவர்கள், பாடசாலை அதிபர்கள், மாவட்ட பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், விசேட விருந்தினராக சிலை நிறு[illegible] சரவணபவானந்தா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-41-159)

## பஜனை நிகழ்வு

யாழ்ப்பாணம், ஓக்.25

வரலாற்றுச் சிறப்புமிக்க ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலய வருடாந்தப் பெருவிழாவை முன்னிட்டுச் சந்நிதியான் ஆச்சிரம சைவகலைப் பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் தினமும் பல்வேறு விசேட நிகழ்வுகள் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளன. இதற்கமைய, கொடியேற்ற உற்சவ நாளான நேற்றுமுன்தினம் சனிக்கிழமை சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் வடபிராந்தியச் சாயி சமித்தி நிலைய அன்பர்களின் பஜனை நிகழ்வு இடம்பெற்றது.(ச-41-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை




நாளொரு நல்வார்த்தை

ஒவ்வொருவரும் உலகத்தை மாற்ற நினைக்கிறார்களேயொழிய தம்மை மாற்றிக்கொள்ள நினைப்பதில்லை.

-ஆபிரஹாம் லிங்கன்-

## முன்னாள் எதிரிகளும் இந்நாள் நண்பர்களும்


முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நிலையில், ரணிலைப் பாதுகாப்பதற்காக முன்னாள் ஜனாதிபதி மைத்திரியின் தலைமையில் அரசியல் பேதங்களைத் துறந்து ஒன்றிணைந்திருக்கின்றன எதிர்க்கட்சிகள். ரணில் தலைமையிலான ஐக்கிய தேசியக்கட்சியுடன் சித்தாந்த ரீதியிலான வேறுபாட்டைக் கொண்ட தரப்பாக தம்மைக் கூறிக்கொள்ளும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, ஐக்கிய தேசியக் கட்சியின் அரைநூற்றாண்டுக்கும் மேற்பட்ட அரசியல் எதிரியான சுதந்திரக் கட்சி, இன்னும் பல சிங்களக் கட்சிகள் மற்றும் அடிப்படைவாதச் சக்திகள் என அனைத்தும் ஒன்று திரண்டு ரணிலின் விடுதலையை வலியுறுத்தி செய்தியாளர் சந்திப்பை நடத்தியுள்ளன. இந்த ஒன்றிணைவுக்கு 'அரசியலமைப்புச் சர்வாதிகாரத்தைத் தோற்கடிக்கும் முயற்சி' என்றும் அவர்கள் பெயரிட்டிருக்கின்றனர்.

இந்த நாடு சிங்கள - பௌத்த பேரினவாதத்துக்கும், சிறுபான்மைத் தரப்பினரின் சுதந்திர வேட்கைக்கும் இடையிலான கருத்தியல் - ஆயுத மோதல்களால் அழிந்ததாகத்தான் வரலாறு. ஆனால், சிங்கள, பௌத்த பேரினவாதத்துக்குள்ளும் இருக்கக்கூடிய மிக மோசமான ஆபத்தைத்தான் ரணிலைக் காப்பாற்றுவதற்காக ஒன்றுகூடியுள்ள தரப்புகள் எமக்கு உணர்த்துகின்றன. ரணிலொன்றும் சுதந்திரப் போராட்டத் தியாகியல்லர். அவர் சிறைசென்றிருப்பது விலையேற்றங்களுக்கு எதிராகப் போராடியமையாலோ அல்லது மக்கள்மயப்பட்ட திட்டங்களை வலியுறுத்தியதற்காகவோ அல்ல. இதன் பின்னணியில் இருப்பது ஊழல். அது தொடர்பான குற்றச்சாட்டுகள் நீதிமன்றத்தில் முறைப்படி முன்வைக்கப்பட்டு நீண்ட பரிசீலனைகள் இடம்பெற்று அதன்பின்னரே ரணில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். இந்த விடயத்தில், அரசியலமைப்புக்குப் புறம்பான சர்வாதிகாரப்போக்கு எங்கு மேலோங்கியுள்ளது என்ற தெளிவுபடுத்தலை மைத்திரி தலைமையில் 'குத்திமுறியும்' அணியினர்தான் தெளிவுபடுத்தவேண்டும்.

மூன்று வருடங்களுக்கு முன்புதான் இந்த நாடு மிகப்பெரும் பொருளாதாரச் சீரழிவை எதிர்கொண்டது. அந்தக் காலப்பகுதியில், கட்சி பேதங்களைக் கடந்து இவர்கள் ஒன்றுபட்டிருந்தால் நிச்சயம் நிதிநிலைமைகளை மேம்படுத்தியிருக்கவும் பொருளாதாரத்தைப் பலப்படுத்தியிருக்கவும் முடியும். அதற்கு முன்னரான முப்பது ஆண்டுகளில் குறைந்தபட்சம் ஒரு தடவையேனும் இந்த ஒற்றுமையைக் காண்பித்திருந்தால், பெரும் குருதிச்சகதியைத் தவிர்த்து நாட்டின் சுபீட்சத்தை உறுதிப்படுத்தியிருக்கமுடியும். ஆனால், அப்போதெல்லாம் இந்த 'மேட்டுக்குடிகளின் குரல்' அஸ்தமித்தும், திக்கொன்றும் திசையொன்றுமாகவே இருந்தது. ஏனெனில்; அது அவர்களின் பிரச்சினையல்ல என்பதே இந்தத் தோரணையின் வெளிப்பாடு. தாம் ஆண்டால் போதும், தமக்குக்கீழ் என்ன நடக்கின்றது என்ற அக்கறை ஒருதடவையேனும் இந்தப் பேர்வழிகளுக்கு ஏற்பட்டதில்லை. இவ்வாறிருக்கையில்தான், வரலாற்றில் முதல்முறை ரணிலுக்காக இவர்கள் இணைந்துள்ளனர்.

இன்னொரு வகையில் சொல்லவேண்டுமாயின், இந்த இணைவும் ரணிலுக்காக நிகழவில்லை. ரணிலின் கைதுக்குக் காண்பிக்கும் எதிர்ப்பால், தமது கைது நடவடிக்கைகள் தள்ளிப்போகவும் - தப்பிக்கவும் முடியும் என்ற எண்ணம் அவர்களிடம் இருப்பதாக சந்தேகிப்பதிலும் நியாயம் இருக்கவே செய்கின்றது. இந்த ஒன்றிணைவின் அவசரத்தையும், அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் அவசியத்தையும் உணர்ந்தாலே நாம் எத்தகைய நிலைப்பாட்டில் இருக்கவேண்டும் என்பது தெளிவாகும்.


செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com



## மருந்துக் கொள்வனவுக்காக ரூ.3,500 மில்லியன் ஒதுக்கீடு

கொழும்பு, ஓக.25

**தற்போதைய மருந்துப் பற்றாக்குறையை சமாளிக்க, பிராந்தியக் கொள்முதல்களுக்காக மருத்துவமனைகளுக்கு 3 ஆயிரத்து 500 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் கூறுகையில்,

கடந்த ஆண்டு விலைமனுக்கோரல் இல்லாததன் விளைவாகவே சில மருந்துகளுக்குப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு விலைமனுக்கோரல் விடப்பட்டிருந்தால், மருந்துகள் சரியாகக் காணப்பட்டிருக்கும். அடுத்த ஆண்டுக்கு விலைமனுக்கோரல் விட்டுள்ளோம். அவ்வப்போது சில நாடுகளுடன் பேச்சு நடத்தி, மருந்துகளை நன்கொடையாகப் பெறுகிறோம். சில நாடுகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திடும்நிலையை அடைந்துவிட்டோம், எனவே இந்தப் பிரச்சினையை நாம் எதிர்கொள்ளமுடியும்- என்றார். (ச-இ)

## அர்ஜுனவுக்கு அழைப்பாணை

கொழும்பு, ஓக.25

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரனை நீதிமன்றில் ஆஜராகுமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் அழைப்பாணை விடுத்துள்ளது.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 26ஆம் திகதி நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு அவருக்கு இந்த அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

2015ஆம் ஆண்டு பெரும் பரபரப்பை ஏற்படுத்திய மத்திய வங்கி பிணைமுறி மோசடி சம்பவத்தில் மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரன் சந்தேகநபராகப் பெயரிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## புளத்சிங்களவில் துப்பாக்கிச்சூடு! ஒருவர் பலி

கொழும்பு, ஓக.25

பொரலஸ்கமுவ, மாலனி புளத்சிங்கள வீதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் 25 வயது இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். மற்றொருவர் காயமடைந்துள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

பொரலஸ்கமுவப் பகுதியில் இடம்பெற்ற இசை நிகழ்ச்சியில் கலந்துகொண்ட பின்னர், சாலையில் நடந்து சென்றபோது, முச்சக்கரவண்டியில் வந்த துப்பாக்கிதாரி ஒருவரால் இந்தத் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது. அத்துடன் இரு தரப்பினரும் சில ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவியல் குழுக்களைச் சேர்ந்தவர்கள் என்பது தெரியவந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (ச-இ)

## பொலிஸ் பரிசோதகர்களுக்கு பதவியுயர்வு

கொழும்பு, ஓக.25

பொலிஸ் பரிசோதகர்கள் 51பேருக்கு உடன் நடைமுறைக்கு வரும் வகையில் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் தரத்துக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. இந்த விடயத்தை ஊடகப் பேச்சாளரும் உதவிப் பொலிஸ் அத்தியட்சகருமான எப்.யு. வூட்லர் தெரிவித்தார். (ச-இ)

## ரணிலின் கைது ஜனநாயக மீறல்



### சந்திரிகா சீற்றம்

யாழ்ப்பாணம், ஓக.25

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கைதுசெய்யப்பட்டமையானது இலங்கையின் ஜனநாயகத்துக்குக் கடுமையான அச்சுறுத்தலாக அமைந்துள்ளது என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க கடும் கவலை தெரிவித்துள்ளார். இந்த நடவடிக்கை நாட்டின் ஜனநாயக விழுமியங்கள் மீதான திட்டமிட்ட தாக்குதலுக்குச் சமம். அதன் தாக்கங்கள் ஒரு தனிநபர் அல்லது அரசியற்கட்சியைத் தாண்டி நீண்டுள்ளது. இந்த வளர்ச்சி ஒட்டுமொத்த சமூகத்தின் உரிமைகளுக்கு ஆபத்தைவிளைவிக்கும். அனைத்து அரசியல் தலைவர்களும் இதுபோன்ற நடவடிக்கைகளை எதிர்க்க வேண்டும் - என்றார். (ச-இ)

நாளை

செவ்வாய்க்கிழமை - ஆவணி 10

26.08.2025

சுபநேரம் : 10.35 - 12.05

ராகுகாலம் : 03.05 - 04.35


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நல்லூரானின் பூங்காவனத் திருவிழா

யாழ்ப்பாணம், ஓக.25

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தின் விசுவாவசு வருடப் பெருந்திருவிழாவின் 26ஆம் நாளான நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மாலை பூங்காவனத் திருவிழா பக்திபூர்வமாக நடைபெற்றது. (ச-41-66)

# காணி, பொலிஸ் அதிகாரங்களை எப்போதுதான் பகிரப்போகிறீர்கள்?

## நாடாளுமன்றத்தில் ரவிகரன் எம்.பி. கேள்வி

**கொழும்பு, ஓக. 25**

**அரசியலமைப்பின் 13ஆம் திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தி, தமிழர்களுக்கு ஓரளவேனும் அதிகாரங்கள் பகிரப்படுவதை அரசாங்கம் எப்போது உறுதிப்படுத்தும் என்று நாடாளுமன்ற உறுப்பினரான துரைராசா ரவிகரன் கேள்வி எழுப்பியுள்ளார்.**

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் அவர் தெரிவித்ததாவது:-

இலங்கை சுதந்திரம் அடைந்த நாள்முதல் தமிழர்களுக்கு எதிரான அடக்குமுறைகளும் துன்பங்களும் பல்வேறு வழிகளில் தொடர்ந்து வருகின்றன. 2009ஆம் ஆண்டுக்கு முன்னர் இராணுவ வல்லாளுகையாலும், போருக்குப் பின்னர் கட்டமைக்கப்பட்ட நுட்பங்கள் கொண்ட மெல்லாளுகையாலும் தமிழர் மீதான அடக்குமுறைகளை, அதிகாரப் பறிப்புகளைத் தமிழர் தாயகப் பரப்புகளில் இந்தத் தீவின் அரசாங்கங்கள் தொடர்ச்சியாக மேற்கொண்டுவருகின்றன.

எண்பது ஆண்டுகளுக்கு மேலாக எமது அரசியல், பொருளாதார, கலாசார உரிமைகள் புறக்கணிக்கப்பட்டு, நீளும் இந்தக் காலவெளியில் தீவிலுள்ள பன்முகத்தன்மையை நிலைநிறுத்த இன்றுவரையான அரசுகள் முயலவில்லை. ஒற்றுமைக்கான எத்தனிப்புகள் இழுத்தடிப்புகளாகின்றன.

போருக்குப் பின்னரும் அதிகளவான இராணுவம் வடகிழக்கில் நிலைகொள்கிறது. இன்று வரை ஆயிரக்கணக்கான ஏக்கர் தமிழர் காணி, இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ளது. முல்லைத்தீவில் மட்டும் எமது மக்களுக்குச் சொந்தமான 5 இலட்சம் ஏக்கர் காணிகள் வரையில் அபகரிக்கப்பட்டு இன்னமும் விடுவிக்கப்படவில்லை.

இணைந்த வடக்கு-கிழக்கில் சமஷ்டி அடிப்படையிலான அதிகாரப்பகிர்வை வலியுறுத்தியே எங்கள் அரசியலை நெடுங்காலமாக இம்மண்ணில் தொடர்கிறோம். 13ஆவது திருத்தச்சட்டத்தை இவ்வரசு முழுமையாக எப்போது நடைமுறைப்படுத்தப்போகிறது? பொலிஸ் மற்றும் காணி அதிகாரத்தை இந்த அரசாங்கம் எப்போது வழங்கப்போகின்றது - என்றார். (ம-246,26)

# சைவநெறிப் பரீட்சைகள்

யாழ்ப்பாணம், ஓக.25

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் கோட்பாட்டுக்கமைய பாடசாலை மாணவர்களிடையே சைவத்தையும் தமிழையும் வளர்க்கும் நோக்குடன் சைவ பரிபாலன சபையினால் நடத்தப்படும் 2025ஆம் ஆண்டுக்குரிய பரீட்சைகள் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 20ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகி பாடசாலைகளில் நடைபெறும்.

தரம் 2முதல் தரம் 12வரையான மாணவர்களுக்கு சைவநெறி மற்றும் தரம் 2முதல் 8வரையான மாணவர்களுக்கு தமிழ்மொழிப் பாடங்களுக்கான பரீட்சைகள் நடத்தப்படுகின்றன. மாணவர்களின் செயற்றிறனை அடிப்படையாகக்கொண்டு சைவநெறி மற்றும் தமிழ்பாடங்களுக்குரிய சான்றிதழ்கள் வழங்கப்படுவதுடன் ஒவ்வொரு தரத்திலும் 1,2,3ஆம் இடங்களைப் பெறும் மாணவர்களுக்கு முறையே ரூ.10,000, ரூ.7000, ரூ.5000 ஆகவும் தொடர்ந்து 12மாணவர்களுக்கு 3000ரூபாவும் பணப்பரிசில்களாக வழங்கப்படும்.

இப்பரீட்சைக்கான விண்ணப்பப்படிவங்கள் பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. புதிதாக இணைந்து கொள்ள விரும்பும் பாடசாலைகள் 0777895716 அல்லது 0212227678 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-41)

# சுகாதாரமின்றி இயங்கிய உணவகத்துக்குத் தண்டம்

யாழ்ப்பாணம், ஓக.25

வல்வெட்டித்துறை நகரசபையின் ஆளுகைக்குட்பட்ட தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயச் சூழலில் சுகாதாரச் சீர்கேட்டுடன் இயங்கிய உணவகம் ஒன்றுக்கு 25ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறை நகரசபையின் பொதுச் சுகாதார பரிசோதகரால் மேற்கொள்ளப்பட்ட திடீர்ச் சோதனையின்போது குறித்த உணவகத்தில் மருத்துவ சான்றிதழ் இல்லாமல் ஊழியர்களை உணவகத்தில் அனுமதித்தமை, உணவகத்தில் கடமைபுரியும் ஊழியர்கள் தனிநபர் சுகாதாரம் பேணாமை, இலையான் பெருக இடமளித்தமை, குடிப்பதற்கும் சுத்திகரிப்புக்கும் பயன்படும் நீரானது குடிக்கத்தக்கது என உறுதி செய்ய தவறியமை ஆகியவை கண்டறியப்பட்ட நிலையில் உணவக உரிமையாளருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது கடும் எச்சரிக்கை செய்யப்பட்டு 25ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டது. (ச-26)



## ஆன்மிக உரை

யாழ்ப்பாணம், ஓக.25

வரலாற்றுச் சிறப்புமிக்க தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய விசுவாவசு வருடப் பெருவிழாவை முன்னிட்டுச் சந்நிதியான் ஆச்சிரம சைவகலைப் பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் தினமும் சிறப்பு நிகழ்வுகள் இடம்பெற்றுவருகிறன. பெருவிழாவின் இரண்டாம் நாளான நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற நிகழ்வில் "முருக வழிபாடு" எனும் தலைப்பில் யாழ்.பல்கலைக்கழக மாணவன் க.பிரணவன் ஆன்மிக உரை ஆற்றினார். (ச-41-66)

## நூற்றாண்டு விழா

யாழ்ப்பாணம், ஓக.25

மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியின் நூற்றாண்டு விழா ஆரம்ப நிகழ்வு அதிபர் பொ.நடேசலிங்கம் தலைமையில் நாளை செவ்வாய்க்கிழமை காலை 7.30மணிக்கு கல்லூரியின் அரன் அரங்கில் இடம்பெறவுள்ளது. (ச-41-159)

**பொறியியல், தொழில்நுட்பம்**

# செந்தூரன் மகேஸ்வரனுக்கு சிறந்த நிபுணருக்கான விருது

யாழ்ப்பாணம், ஓக.25

'உலகளாவிய பொறியியல் மற்றும் தொழில்நுட்பத்தில் மிகவும் 'மதிப்புவாய்ந்த நிபுணருக்கான 2025 விருது' வடக்கு மாகாணத்தைப் பூர்வீகமாகக் கொண்ட கலாநிதி செந்தூரன் மகேஸ்வரனுக்கு வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளது. 16 ஆண்டுகளுக்கும் மேலாக இலங்கை, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய பல்தேசிய நிறுவனங்களில், தரக்கட்டுப்பாடு, மற்றும் பொறியியல் முகாமைத்துவம் ஆகியவற்றில் மேற்கொண்ட சிறந்த பங்களிப்புகளுக்காக இந்த விருது அவருக்கு வழங்கப்பட்டுள்ளது. விருது வழங்கும் விழா கடந்த கடந்த 17ஆம் திகதி கொழும்பு கோல்பேஸ் ஹோட்டலில் நடைபெற்றது.

கோப்பாய் வடக்கைப் பூர்வீகமாகக் கொண்ட கலாநிதி செந்தூரன் மகேஸ்வரன், யாழ்.இந்துக்கல்லூரியின் பழைய மாணவராவார். இவர், ஐ.எஸ்.ஓ. தணிக்கையாளர்களின் சர்வதேச பதிவு மற்றும், ஐக்கிய இராச்சியத்தின் பட்டய தர நிர்ணய நிறுவகத்தால் அங்கீகரிக்கப்பட்ட, சர்வதேச தரச்சான்றிதழ் வழங்கும் உரிமத்தை பெற்ற தலைமை அதிகாரியும் ஆவார்.

இவை தவிர, அவுஸ்திரேலியாவின் பொருளாதாரம் மற்றும் அமைதிக்கான நிறுவகத்தின் இலங்கைக்கான சமாதான தூதுவராகவும் செயற்படுகிறார். இவர் சிறந்த பொறியியல் மற்றும் புகழ்பெற்ற ஆராய்ச்சிக்கான கௌரவ விருதுகள் 2025, ஆராய்ச்சி மற்றும் பொறியியலில் சிறந்த பங்களிப்புக்கான அரேபிய வர்த்தக சம்மேளனத்தின் விருது, சிறந்த பொறியியல் மற்றும் தொழில்நுட்பத்திற்கான சர்வதேச வணிக விருதுகள் 2025 மற்றும் 2026 இற்கான ஆசியாவின் கௌரவ விருது மற்றும் ஆசியாவின் வாழ்நாள் சாதனையாளர் விருது ஆகியவற்றையும் வென்றுள்ளார். (த)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நீர்வளக் கண்காட்சி

யாழ்ப்பாணம், ஓக.25


வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தின் பெருந்திருவிழாவை முன்னிட்டு 'நிலத்தடி நீர் எங்கள் உயிர்நாடி' எனும் தொனிப் பொருளில் நீர்வளக் கண்காட்சி நல்லூர் பாரதியார் சிலைக்கு அருகில் அமைந்துள்ள நெசவுக் கைத் தொழிற்பயிற்சி நிறுவன வளாகத்தில் கடந்த புதன் கிழமை இடம்பெற்றது.

கண்காட்சியின் ஓர் அங்கமாக கண்காட்சி வளாகத்தில் அறிமுகம் செய்துவைக்கப்பட்ட பாரம்பரிய ஊருணி ஆற்றுகைக் களத்தில் வவுனியாப் பல்கலைக்கழகத்தின் சூழலியல் கற்கைநெறியின் இறுதியாண்டு மாணவர்களுக்காக நடைபெற்ற சிறப்புக் காட்சிப்படுத்தல் மற்றும் இயற்கை பற்றிய தொடர்பாடல் சார்ந்த கற்கைநெறியின்போது குறித்த கண்காட்சியைக் காண வருகைதந்திருந்த பன்னாட்டு நீர்வள ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆய்வாளர்களுடன் வவுனியாப் பல்கலைக்கழக மாணவர்களின் அறிமுக நிகழ்வு நடைபெற்றது.

நிகழ்வில் கொழும்பை மையமாகக்கொண்டு இயங்குகின்ற சர்வதேச நீர் முகாமைத்துவத்துக்கான ஆய்வு நிறுவனம் சார்பில் டிமுத்து மலால்கொட, மகேஷ் ஜம்பானி, வடமாகாணத்தின் ஓய்வுநிலை நீர்ப்பாசனப் பணிப்பாளர் எந்திரி சண்முகானந்தன், இந்தச் செயற்றிட்டத்தோடு நீண்டகாலத் தொடர்பிலிருக்கின்ற யாழ்ப்பாணத்தில் நிலத்தடி நீர் பற்றிய ஆய்வை நிகழ்த்திய அறிஞர் ஜே புந்தகே, யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை மாணவிகள் 75பேர் மற்றும் விஞ்ஞான ஆசிரியர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-41-66)

# காற்றாலைத்திட்டங்களை மன்னாரில் குவிக்காதீர்!

## ரவிகரன் எம்.பி. வலியுறுத்து



**முல்லைத்தீவு, ஓக.25**

**மன்னார்த்தீவின் தெற்குக்கரையில் 30 நவீன விசையாழிகளை உள்ளடக்கி ஏற்கனவே உருவாக்கப்பட்டுள்ள 'தம்பபவனி' எனும் காற்றாலைத்திட்டமே போதும். இனியும் மன்னார்த்தீவினுள் காற்றாலைத்திட்டம் தேவையில்லை என வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், மன்னார் மக்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுவருகின்றனர். மன்னார்த்தீவில் காற்றாலை மின் உற்பத்திக்கோபுரங்களை அமைக்கக்கூடாதென வலியுறுத்தியே அவர்களால் இவ்வாறு தொடர் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுவருகின்றது.

ஏற்கனவே மன்னார்த்தீவின் தெற்குக் கரையில் கடந்த 2020ஆம் ஆண்டு 'தம்பபவனி' எனும் பெயரில் 30நவீன விசையாழிகளை உள்ளடக்கி இலங்கையின் முதலாவது பெரிய அளவிலான காற்றாலை மின்சக்திப்பூங்கா அமைக்கப்பட்டுள்ளது.

இதனைவிட மன்னார்த் தீவுக்கு வெளியேயும் வங்காலை மற்றும் நறுவிலிக்குளம் ஆகிய பகுதிகளிலும் 6 காற்றாலை மின் உற்பத்திக்கோபுரங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

நாட்டின் பொருளாதாரத்துக்கும், நாட்டின் மின்சாரத்தேவைக்குமாக ஏற்கனவே தம்மால் பெரும் பங்களிப்பு வழங்கப்பட்டுள்ளதென்பதே மன்னார்த்தீவு மக்களின் அபிப்பிராயம். அத்தோடு சிறிய அளவிலான நிலப்பரப்பைக்கொண்ட மன்னார்த்தீவில் மீண்டும் காற்றாலை மின்உற்பத்திக் கோபுரங்களை நிறுவினால் மக்கள் வாழமுடியாத துர்ப்பாக்கியநிலை ஏற்படும் - என்றார். (ச-26,246)

சுவிட்சர்லாந்தில் அண்மையில் நடைபெற்ற ஐரோப்பிய ரீதியிலான விளையாட்டுப் போட்டியில், குமரநகர் சிவப்பு மற்றும் குமரநகர் மஞ்சள் விளையாட்டு அணியினர் இரண்டு தனி அணிகளாகக் களமிறங்கினர். இதில், குமரநகர் சிவப்பு அணி தொடர்ந்து மூன்றாவது முறையாக வெற்றிபெற்று "சூழல் கிண்ணத்தை" தம் வசப்படுத்தியது. குமரநகர் மஞ்சள் அணி சிறப்பாக விளையாடி மூன்றாம் இடத்தைத் தட்டிச்சென்றது. (ச25,159)





# சந்நிதியான் ஆச்சிரமத்தால் உதவிகள் வழங்கிவைப்பு

யாழ்ப்பாணம், ஓக.25


சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைப் பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் வாராந்த நிகழ்வு சந்நிதியான் ஆச்சிரம ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் ஆச்சிரம மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் ஆசிரியரும், சைவப் புலவருமான இரா.செல்வவடிவேல் 'மகாபாரதம்' எனும் தலைப்பில் தொடர் ஆன்மீகச் சொற்பொழிவு நிகழ்த்தி னார். தொடர்ந்து உதவித் திட்டங்களாக, முல்லைத்தீவு உடையார்கட்டு மகாவித்தியாலயத்தில் உயர்தரத்தில் கல்விகற்கும் மாணவி, வவுனியா கனகராயன்குளம் மகா வித்தியாலயத்தில் சாதாரண தரத்தில் கல்விகற்கும் மாணவி ஆகியோருக்கு மொத்தமாக 97ஆயிரத்து 700 ரூபா பெறுமதியான இரண்டு புதிய துவிச்சக்கரவண்டிகள் ஆச்சிரம நிர்வாகத்தால் வழங்கிவைக்கப்பட்டது. மேலும் யாழ்.மாவட்ட ஆலயங்களைத் தரிசிப்பதற்காகப் புத்தளம் கருமாரி அம்மன் ஆலய ஸ்தாபகர் எஸ்.மகேந்திரன் விடுத்த கோரிக்கைக்கு அமைவாகப் போக்குவரத்து நிதியாக 1 இலட்சத்து 25 ஆயிரம் ரூபா நிதி வழங்கப்பட்டது.

சங்கானைப் பிரதேச மருத்துவமனை நிர்வாகத்தின் கோரிக்கைக்கமைவாக நரம்பியல் புனருத்தாபனப் பிரிவுக்குரிய பக்கவாத நோயாளிகளுக்கான சிகிச்சை இயன் மருத்துவருக்கு ஆடி மாத வேதனம் வழங்குவதற்காக 70 ஆயிரம் ரூபா நிதி வழங்கப்பட்டது. (ச-25, 66)

# சாவ.மகளிர் கல்லூரி மாணவிக்கு சுற்றாடல் முன்னோடி விருது

யாழ்ப்பாணம், ஓக.25

தென்மராட்சி வலயத்தில் முதன்முறையாக சுற்றாடல் முன்னோடி ஜனாதிபதி விருதை சாவகச்சேரி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த ஆத்மிகா சனாதனன் பெற்றுக்கொண்டார். கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க விருதினை வழங்கிவைத்தார். (ச-25)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவு நாள்

தோற்றம்
17 . 12 . 1933



மறைவு
05 . 09 . 2024

எழுதுமட்டுவாழைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும்
திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர் தவமலர் செல்வரத்தினம் (முன்னாள் ஆசிரியை)

**திதி : பூர்வபக்க திருதியை (25.08.2025)**

எழுதூராம் எழுதுமட்டுவாழ் பெற்ற
எங்கள் அம்மா தவமலரம்மா
அன்பான அம்மா எங்கள் தெய்வமம்மா
அயல் வீடு செல்லாமல் எமை வளர்த்தீரம்மா
நல்லொழுக்கம் தன்னை ஊட்டினீரம்மா
உயர் கல்விதனை தந்தீரம்மா
இறைவழிபாடுதனை ஊட்டினீரம்மா
பெரிய கேணிப் பிள்ளையார் உம் குல தெய்வமம்மா
நல்லூரான் வழிபாடு காட்டினீரம்மா
நல்லூரானே உமை அழைத்தானம்மா
எமைவிட்டு சென்றீரம்மா
பழைய நினைவுகள் வாட்டுதம்மா
பழு இல்லா உம் வாழ்க்கை எளிமை தானம்மா மறவோமம்மா
எமை வழிப்படுத்தும், எம் பிள்ளைகளை வழிப்படுத்துமம்மா
தெய்வமம்மா
எமை விட்டு ஓராண்டு சென்றதம்மா
என்றாலும் நீர் எம் நெஞ்சில் தானம்மா
நூறு ஆண்டுகள் சென்றாலும் உமை மறக்க இதயம் ஒன்று உண்டோ
இல்லையம்மா இல்லையம்மா.

தலங்காவல், பிள்ளையார் கோவில்
7ம் வீதி திருநெல்வேலி

என்றென்றும் உமைமறவாத
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்

(CS 59225) E

# மாதாந்தச் சந்தை


யாழ்ப்பாணம், ஓக.25

2025ஆண்டு ஓகஸ்ட் மாதத்துக்கான மாதாந்தச் சந்தை நிகழ்வு இன்று திங்கட்கிழமை உடுவில் பிரதேசசெயலக வீதியோரத்தில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நிகழ்வில் தமது உற்பத்திப் பொருள்களைச் சந்தைப்படுத்த விரும்பும் தொழில் முயற்சியாளர்கள் இணைந்துகொள்ளமுடியும். அனைவரையும் நிகழ்வில் பங்குபற்றி எமது தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்குமாறு உடுவில் பிரதேச செயலகத்தினர் அறிவித்துள்ளனர். (ச-41-66)

# மரண அறிவித்தல்

## சந்திரசேகரம் பிரணவன்

**(2018 உயர்தர மாணவன் - யாழ் மத்திய கல்லூரி)**



தோற்றம் 17.11.1999 — மறைவு 24.08.2025

பரமேஸ்வரி அம்பாள் வீதி கோப்பாய் தெற்கை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சந்திரசேகரம் பிரணவன் நேற்று (24.08.2025) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சந்திரசேகரம் (யாழ் பல்கலைக்கழக முன்னாள் ஊழியர்) - ஸ்ரீநயினைநாயகி தம்பதியரின் அன்பு மகனும், நர்த்தனன் (யாழ் பல்கலைக்கழக ஊழியர்), துவாரகன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், அருட்செல்வியின் மைத்துனரும், கிஷாறாவின் அன்பு சிறிய தகப்பனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.08.2025) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 02.00 மணியளவில் கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

தகவல் : குடும்பத்தினர்
076 356 9052
077 194 7161

# முதலாம் ஆண்டு நினைவலை



தோற்றம் : 04.11.1935 — மறைவு : 05.09.2025

## திருமதி தங்கரத்தினம் கயிலாயபிள்ளை

கடந்த 09.10.2024 வியாழக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி அமரர் திருமதி தங்கரத்தினம் கயிலாயபிள்ளை (ஆசையம்மா) அவர்களின் முதலாம் ஆண்டு நினைவுதினமான இன்று (25.08.2025) திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் ஆத்மசாந்திப் பிரார்த்தனை எமது இல்லத்தில் நடைபெறும் என்பதனை அறியத்தருகின்றோம்.

ஆண்டு ஒன்று சென்றாலும் உங்கள் நினைவுகள் மாறவில்லை

செட்டிவளவு ஒழுங்கை,
இணுவில் மேற்கு,
இணுவில்

குடும்பத்தினர்.
077 208 7976

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

# மரண அறிவித்தல்

பிறப்பு
15 . 10 . 1947



இறப்பு
23 . 08 . 2025

## விஸ்வகுல திலகர் இரத்தினம் தங்கேஸ்வரன் (பத்தர்)

கலைமகள் வீதி, கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும், கொண்ட இரத்தினம் தங்கேஸ்வரன் அவர்கள் கடந்த (23.08.2025) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இரத்தினம்-இரத்தினம் தம்பதியரின் அன்பு புதல்வரும், காலஞ்சென்றவர்களான அருட்பிரகாசம்-சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகனும், இதயராணி அவர்களின் பாசமிகு கணவரும், இரத்தினாகரன், லக்சிகா, தயானி ஆகியோரின் பாசமிகு தந்தையும், நிவேஜா, தசீந்திரன், ஜனார்த்தனன் ஆகியோரின் அன்பு மாமனாரும், சிவானி, சக்தி, தங்கவேலன், கரீஷ்மன், டிசான், ஸ்பரிதி, சாயித்தியா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.08.2025) செவ்வாய்க்கிழமை முற்பகல் 09.00 மணியளவில் கலைமகள் வீதியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்து செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
076 948 4387 (தசி)
077 072 4964 (ஜனா)
076 918 4024 (தயானி)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தமிழர்களின் தாகம் தமிழீழமே சமஷ்டி கோருவது சூழ்நிலையே

ரவிகரன் எம்.பி. சுட்டிக்காட்டு

**முல்லைத்தீவு, ஓக.25**

**தமிழ்மக்கள் தமிழீழத்தை அடைவதற்கே விரும்பினர். தற்போதுள்ள சூழ்நிலை காரணமாகவே சமஷ்டியைக் கோருகின்றார்கள் என வன்னி மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.**

நாடாளுமன்றில் உரையாற்றுகையில் அவர் மேலும் கூறியதாவது:- வன்னி மாவட்டத்தைச் சார்ந்த அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் செல்லத்தம்பி திலகநாதன் எமது தமிழ் மக்கள் தனிநாட்டையோ, சம்ஷ்டித் தீர்வினையோ கேட்கவில்லை எனத் தவறான கருத்தை இங்கே பதிவுசெய்துள்ளார்.

ஒரு விடயத்தை இங்கு அழுத்தமாக கூறிவைக்க விரும்புகின்றேன். எமது தமிழ்மக்கள் எப்போதும் கேட்பது தமிழ் ஈழத்தைத்தான். ஆனால் தற்போதுள்ள சூழ்நிலை காரணமாகவே தமிழ் மக்கள் சமஷ்டியைக் கோருகின்றனர். அவ்வாறிருக்க இங்கு வந்து பிழையான கருத்துகளைப் பதிவுசெய்வதை ஒருபோதும் எம்மால் ஏற்றுக்கொள்ளமுடியாது - என்றார். (ச-26,246)

# நகரசபையினருடன் பெண் வாய்த்தர்க்கம்

## பொலிஸார் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஓக.25

சாவகச்சேரி நகரசபையினருடன் தகாத வார்த்தைகளில் பேசி வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்ட பெண்ணுக்கு நகரசபையின் அபிவிருத்திப் பணிகளில் இடையூறு விளைவிக்கக்கூடாது எனப் பொலிஸாரால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரியவருகையில், சாவகச்சேரி நகரசபைத் தவிசாளர், உபதவிசாளர் மற்றும் உறுப்பினர்கள் உப்புக்கேணிக்கு களவிஜயம் மேற்கொண்டபோது பெண்ணொருவர் நகரசபையினரைத் தகாத வார்த்தைகளில் பேசியதோடு வீடியோ பதிவு செய்துள்ளார்.

இதன்போது உபதவிசாளர் கிஷோர் உறுப்பினர்களோடு மரியாதையோடு நடந்துகொள்ளுமாறும் நகரசபையின் பணிகளில் தலையிட வேண்டாம் எனவும் குறித்த பெண்ணை எச்சரித்துள்ளார். இந்த நிலையில் உபதவிசாளர் கிஷோர் மற்றும் வட்டார உறுப்பினர் பிரணவராசா ஆகியோர் தன்னை அச்சுறுத்தி தொலைபேசியைப் பறித்ததாக குறித்த பெண் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறையிட்டுள்ளார்.

அதனையடுத்து உபதவிசாளர் கிஷோர் மற்றும் உறுப்பினர் பிரணவராசா ஆகியோர் சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்துக்கு அழைக்கப்பட்ட நிலையில் முறைப்பாடு தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த சாவகச்சேரிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, நகரசபையின் அபிவிருத்திப் பணிகளிலும் உறுப்பினர்களின் பணிகளிலும் குறித்த பெண் தலையிட முடியாது என்றும் அபிவிருத்திப் பணிகளில் குறைபாடு இருந்தால் நகரசபைக்கு எழுத்துமூலமாக அறிவிக்கலாம் என்றும் அறிவுறுத்தி விசாரணைகளை முடிவுறுத்தினார். (ச-28,27)

# நடமாடும் சுகாதார சேவை செப்ரெம்பரில் நெடுந்தீவில்

யாழ்ப்பாணம், ஓக. 25

நெடுந்தீவுப் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் செப்ரம்பர் 12ஆம், 13ஆம் திகதிகளில் விசேட சுகாதார நடமாடும் சேவை இடம்பெறவுள்ளது.

நடமாடும் சேவை தொடர்பாகத் துறைசார் அதிகாரிகள் மற்றும் உள்ளூர்ப் பிரதிநிதிகளுடனான முன்னாயத்தக் கலந்துரையாடல் பிரதேச செயலாளர் திருமதி நிவேதிகா கேதீசன் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் கடந்த செவ்வாய்க் கிழமை இடம்பெற்றது. இதில் யாழ். பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் நிகழ்வு தொடர்பான விளக்கங்களை வழங்கினார். (ச-25,9)



# கோப்பாய் பொலிஸ் நிலைய நிரந்தரக் கட்டடத்துக்கு அடிக்கல்

யாழ்ப்பாணம், ஓக.25

கோப்பாய் பொலிஸ் நிலையத்துக்கான நிரந்தரப் பொலிஸ் நிலையம் அமைக்கும் அடிக்கல் நடும் நிகழ்வு அண்மையில் உரும்பிராய் செல்வபுரம் பகுதியில் இடம்பெற்றது. கோப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராகக் வடமாகாண மூத்த பொலிஸ் அதிகாரி கலந்துகொண்டார். அதேவேளை கடந்த இரண்டு தசாப்த காலத்துக்கு மேலாக கோப்பாய் பொலிஸ் நிலையம் இராசவீதி கல்வியங்காடுப் பகுதியில் தனியாரின் காணியில் இயங்கிவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-26)


# இசைப்போட்டி

யாழ்ப்பாணம், ஓக.25

தென்மராட்சிக் கல்வி வலயத்தின் மேலைத்தேய வாத்திய இசைப்போட்டி தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் கி.கமலராஜன் தலைமையில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை தென்மராட்சிக் கல்வி வலயத்தில் இடம்பெற்றது.

இந்தப் போட்டியில் சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை முதலாம் இடத்தையும் மட்டுவில் தெற்கு அ.த.க. பாடசாலை இரண்டாம் இடத்தையும் கைதடி நுணாவில் அ.த.க. பாடசாலை மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டன.

நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலயக் கணக்காளர் சோ.பிரபு, சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி பொலிஸ் நிலையக் காவல் ஆய்வாளர், கௌரவ விருந்தினர்களாக மீசாலை வீரசிங்கம் ஆரம்பப் பாடசாலை அதிபர் க.இளங்கோவன், வீ.வாகீசன், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (ச-41-159)



முறிகண்டி தென்னிந்தியத் திருச்சபையின் 44ஆவது ஆண்டு வழிபாடும், சிறுவர் அபிவிருத்தி நிலையக் கட்டடத் திறப்புவிழாவும் திருச்சபைக் குருவான வணபிதா எஸ்.குகனேஸ்வரன் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் தென்னிந்தியத் திருச்சபையின் பேராயர், திருச்சபையின் சிரேஸ்ட ஊழியர்கள், உதவிக்குருமார், திருச்சபை மக்கள், பயனாளிகள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-41,113)



# சக வாழ்வை ஏற்படுத்த மரநடுகை



கொடிகாமம், ஓக. 25

இனங்களுக்கிடையே சக வாழ்வை ஏற்படுத்தும் கருத்திட்டத்துக்கான மர நடுகை நிகழ்வு நாவற்குழி மேற்குக் கிராம அபிவிருத்திச்சங்கம் மற்றும் சக வாழ்வுச்சங்கம் ஆகியவற்றின் பங்களிப்போடு நாவற்குழி மேற்கு ஜே/294 கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள அரும்புகள் முன்பள்ளி முன்றலில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் தென்மராட்சிப் பிரதேச செயலகப் பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் இ.திலீபன், சாவகச்சேரிப் பிரதேச சபை உப தவிசாளர் இ.யோகேஸ்வரன், நாவற்குழி மேற்கு கிராம அலுவலர் மாதுங்கன், அபிவிருத்தி உத்தியோகத்தர் தங்கேஸ்வரன், முன்பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் கிராமமட்ட அமைப்புகளின் பிரதிநிகள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-25,159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியில் மாற்றத்தை விரைந்து ஏற்படுத்துக

## வடக்கு ஆளுநர் பணிப்பு

யாழ்ப்பாணம், ஓக.25

எமது மாகாணத்தில் கல்வியில் மாற்றத்தை விரைவாக ஏற்படுத்தவேண்டிய பொறுப்பு வலயக்கல்விப் பணிப்பாளர்களுடன் சேர்த்து எங்கள் அனைவருக்கும் உள்ளது. ஒவ்வொருவரும் அர்ப்பணிப்பாக அதற்காக செயலாற்றவேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சின் கீழ் இந்த ஆண்டு நடைமுறைப் படுத்தப்படும் திட்டங்களின் நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம் தொடர்பில் ஆராயும் மாதாந்தக் கலந்துரையாடலில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

ஒவ்வொரு பாடசாலைகளின் வளர்ச்சி அந்தந்தப் பாடசாலையின் அதிபரையே சாரும். எனவே அந்தந்த சமூகத்துக்கு உரிய பொறுப்புகளை அந்தந்தப் பாடசாலை அதிபர்களே ஏற்கவேண்டும்.

ஒவ்வொரு வலயக்கல்விப் பணிப்பாளர்களும் அடிக்கடி பாடசாலைகளுக்கு களப் பயணம் மேற்கொள்ளவேண்டும். அவ்வாறு செல்லுகின்ற பொழுது அங்கே காணப்படுகின்ற குறைபாடுகள் மற்றும் வளப் பங்கீடுகள் தொடர்பாக உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.



வளப்பங்கீடுகளுக்கு வலயக்கல்விப் பணிப்பாளர்களே பொறுப்பு. தங்களின் பொறுப்புகளை உரியமுறையில் நிறைவேற்றாத வலயக்கல்விப் பணிப்பாளர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்- என்றார். (ச-159,113)


## மகோற்சவ கால கடைகளுக்கான ஏலம்

(26.08.2025 செவ்வாய்க்கிழமை, மாலை 04.30)

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலய ஆவணி மகோற்சவம் 28.08.2025 அன்று ஆரம்பமாகின்றது. இம் மகோற்சவ கால கடைகளுக்கான ஏலம் 26.08.2025 மாலை 04.30 மணியளவில் ஆலயத்தில் நடைபெறும் என்பதனை அறியத்தருகின்றோம்.

ஆலய பரிபாலன சபை

076 170 7073

## வேலையாள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பண்ணை ஒன்றிற்குப் பயிர்ச்செய்கை, கால்நடை தொடர்பான கல்வி அறிவும் குறைந்த பட்சம் 3 வருட அனுபவமும் உடைய வேலையாள் தேவை. ஆர்வமுள்ளவர்கள் சுயவிபரக் கோவையை கீழ்வரும் தொலைபேசி இலக்கத்திற்கு அனுப்பிவைக்கவும்.

குறிப்பு: மோட்டார் சைக்கிள் அனுமதிப்பதிரம் வைத்திருப்பது அவசியமானது மற்றும் வாகன சாரதி அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். NVQ 5 OR NVQ 6 தகைமையுடன் அனுபவம் மற்றும் பால் கறக்கும் இயந்திரம் பயன்படுத்த தெரிந்திருக்க வேண்டும். பண்ணை வீட்டில் வசிக்க விருப்பமுள்ளவர்களுக்கு தங்குமிடம் வழங்கப்படும்.

whatsapp - 076 287 8655

## பெயர்மாற்றம்

கைதடி நுணாவில் சாவகச்சேரியில் வசிக்கும் கந்தையா சிவசுப்பிரமணியம் ஆகிய நான் எனது பெயரை கந்தையா சுப்பிரமணியம் என மாற்றம் செய்கின்றேன்.

கந்தையா சுப்பிரமணியம்




உலக மனிதநேய தினத்தை முன்னிட்டு சர்வதேச மனித உரிமைகள் குளோபல் மிஷன் அமைப்பின் யாழ்ப்பாணக் கிளையினரின் ஏற்பாட்டில் யாழ். ஓட்டுமடம் ஞானக்குழந்தை முன்பள்ளியில் மாணவர்களுக்கு மரக்கன்றுகள் வழங்கப்பட்டன. (ச-25)

### முக்கியமான...

வர் சஜித் பிரேமதாஸவை இந்த ஊடக சந்திப்பில் காணவில்லை. அதேபோன்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மற்றும் மஹிந்த ராஜபக்ச ஆகியோரும் இந்த ஊடக சந்திப்பில் கலந்துகொள்வார்கள் என்று அறிவிக்கப்பட்டிருந்தபோதும் இவர்கள் இருவரும் ஊடக சந்திப்புக்கு வரவில்லை.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, ரணில் விக்கிரம சிங்க கைது தொடர்பில் ஏற்கனவே வெளியிட்டிருந்த அறிக்கை ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் தலதா அத்துகோரளவால் ஊடக சந்திப்பில் வாசிக்கப்பட்டது. (அ-எ-இ)

### வடக்கிலும்...

இவ்வாறு கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இ. சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள தேசிய மக்கள் சக்தியின் மாவட்ட அலுவலகத்தில் நேற்று நடத்தப்பட்ட விசேட ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ரணில் விக்கிரமசிங்கவை நெருங்க முடியாது. அவர் மீது கைவைக்க முடியாது. அவர் சர்வதேச இராஜதந்திரம் தெரிந்தவர், நரித்தனமானவர், அவரோடு விளையாட முற்படவேண்டாம் என்று எதிரணியினர் கூறிவந்தனர். இப்போது ரணில் விக்கிரமசிங்கமீது சட்டம் பாய்ந்துள்ளதால் ராஜபக்சக்கள் ஆட்டம் கண்டுள்ளனர்.

நாட்டுக்குத் தீங்கு, இழப்பு ஏற்படுத்தியது ரணிலா, ராஜபக்சக்களா என்பது எமக்கு முக்கியமல்ல. எவராக இருந்தாலும் ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவர்களுக்கு எதிராகச் சட்டம் தனது கடமையைச் செய்யும்.

வடக்கில் உள்ள சில அரசியல்வாதிகள் வாழ்விலும் இன்னும் ஒரு சில வாரங்களில் ரணில் விக்கிரமசிங்கவைப் போன்று வசந்தம் வீசும் என்று நினைக்கின்றோம் - என்றார். (அ-எ-26)

### தபால்...

வுடன் மேற்கொண்ட கலந்துரையாடலை அடுத்து தபால் திணைக்களத் தொழிற்சங்கங்கள் தாம் முன்னெடுத்துவந்த தொழிற்சங்க நடவடிக்கையை இடைநிறுத்தத் தீர்மானித்துள்ளன. (அ-எ-இ)


# INVITATION FOR BIDS
# THUNUKKAI PRADESHIYA SABHA

1. The Chairman, Divisional Procurement Committee on behalf of the Chairman, Thunukkai Pradeshiya Sabha,Vellankulam Road, Thunukkai invites sealed bids from eligible and qualified bidders for the works described in the table below. All the relevant details are described in the same table.
2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB)
3. Qualification' requirements are indicated in section 4 of the Procurement Document. Additional details are provided in the Section 5 of the Procurement Document.
4. Interested bidders may obtain further information from address given below in 6 and inspect the bidding documents at the same place on any working days from during the document issuing period mentioned in table below between 09:00 hrs and 15:00 hrs.

| | | Document Issuing/Purchasing Period | | | From 25.08.2025 until 07.09.2025 | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | Pre-Bid Conference | | | At 10.30 A.M on 01.09.2025 | | | | | |
| | | Closing and Opening of Bids | | | At 02.30 P.M on 08.09.2025 | | | | | |
| | | | | | | | | | Required Bid Security | |
| S/No | Bid ID | Description of Work | Source of Fund | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Required CIDA Grade & Speciality | Non-Refundable Fee (Rs.) | Bid Validity Period upto | Amount (Rs.) | Validity Period |
| 1 | PSDG/NP/MU/TKPS/2025/LAR/02 | Construction of Valanagar RDS Lane – Stage-ii | PSDG Fund | 1.40 | 63 | C9 above (Building) | 2000.00 | 09-Nov-2025 | 21,000.00 | 07-Dec-2025 |

A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Chairman, Thunukkai Pradeshiya Sabha, Vellankulam Road, Thunukkai (T.P: 021 228 4532, email: psthunukkai@gmail.com) from 9:00 hrs to 15:00 hrs. during the period stated in table above upon payment of non-refundable fees as mentioned in the table. The method of payment will be by cash.

5. Bids (Original & Duplicate) S/No from 01 to 04 must be delivered to the Chairman, Thunukkai Pradeshiya Sabha, vellankulam Road, Thunukkai and Bids (Original & Duplicate) S/No from 05 to 07 must be delivered to the Chairman, Divisional Procurement Committee, Thunukkai Pradeshiya Sabha, Vellankulam Road, Thuukkai on or before 02.30 P.M as stated in table above. Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend at Thunukkai Pradeshiya Sabha, vellankulam Road, Thunukkai.
6. Pre-Bid Conference will be held at Conference Hall, Thunukkai Pradeshiya Sabha, Vellankulam Road, Thunukai commencing at 10.30 AM as stated in table above.
7. All Bids must be accompanied by either Bid security as per the information given in the Tables.

Chairman
Divisional Procurement Committee,
Thunukkai Pradeshiya Sabha,
Vellankulam Road,
Thunukkai.
25.08.2025


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செம்மணி...

ளன. செம்மணி மனிதப் புதைகுழியின் இரண்டாம் கட்ட அகழ்வு நடவடிக்கைகள் கடந்த 6ஆம் திகதிவரை முன்னெடுக்கப்பட்டிருந்தன. முதலாம் மற்றும் இரண்டாம் கட்டங்களாக இதுவரை மேற்கொள்ளப்பட்ட அகழ்வு நடவடிக்கைகளில் நூற்றுக்கும் மேற்பட்ட மனித எலும்புத்தொகுதிகள் அடை யாளம் காணப்பட்டு, மீட்கப்பட்டுள்ளன. செம்மணி மனிதப் புதைகுழி இனங்காணப்பட்ட பகுதியில் மேலும் பல புதைகுழிகள் இருக்கலாம் என்ற வலுவான சந் தேகம் காணப்படும் நிலையில், மூன்றாம்கட்ட அகழ்வுநடவடிக்கை இன்று முதல் ஆரம்பமாகவுள்ளது. (அ-எ-26)

## பொதுமக்களின்...

பிரச்சினைக்கும் சுமுகமாகத் தீர்வு காணப்படும் என்று கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இ.சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.
யாழ்ப்பாணத்தில் உள்ள தேசிய மக்கள் சக்தியின் மாவட்ட அலுவலகத்தில் நேற்று நடத்தப்பட்ட விசேட ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
பொதுமக்களுக்குச் சொந்தமான அனைத்துக் காணிகளும் விடுவிக்கப்படும். தையிட்டிவிகாரைப்பிரச்சினையும் தீர்க்கப்படும். வடக்குக்கு வரும் சுற்றுலாப் பயணிகள்மற்றும் முதலீடுகள் தொடர்பில் சில அதிகாரிகள் இழுத்தடிப்புப் போக்கைக் கொண்டிருக்கின்றனர். அவர்கள் தொடர்பாக எமக்குத் தெரியும். அவர்களுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (அ-எ-26-20)

## வடக்கில்...

முதற்கட்டமாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க எதிர்வரும் முதலாம் திகதி யாழ்ப்பாணம் வரவுள்ளார். அந்தப் பயணத்தில் யாழ்ப்பாணத்தில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.
மண்டைதீவில் சர்வதேச கிரிக்கெட் மைதானத்துக்கு அடிக்கல் நடுதல், யாழ்ப்பாணம் கடவுச்சீட்டு அலுவலகத் திறப்புவிழா, மயிலிட்டித் துறைமுகத்தை மீள ஆரம்பிக்கும் நடவடிக்கை என்பன அவரது வடக்கு வருகையின்போது முன்னெடுக்கப்படவுள்ளன.
யாழ்ப்பாணம்பொதுசனநூலகத்துக்கும் ஜனாதிபதி சென்று அங்கு மேற்கொள்ளப்படவேண்டிய அபிவிருத்திகள் தொடர்பில் ஆராயவுள்ளார்.
எதிர்வரும் 2ஆம் திகதி முல்லைத்தீவு, புதுக்குடியிருப்புப்பிரதேசத்தில்தென்னை முக்கோண வலய புதிய வேலைத்திட்டம் ஆரம்பித்தல், வட்டுவாகல் பாலத்துக்கான அடிக்கல் நடுதல் என்பனவும் ஜனாதிபதியின் பங்கேற்புடன் முன்னெடுக்கப்படவுள்ளன. (அ-எ-26)

## ரணிலின்...

என்று அமைச்சர் பிமல் ரத்நாயக்க கேள்வி எழுப்பியுள்ளார்.
யாழ்ப்பாணத்தில் உள்ள தேசிய மக்கள் சக்தியின் மாவட்ட அலுவலகத்தில் நேற்று நடத்தப்பட்ட விசேட ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
கறுப்பு ஜுலைக் கலவரம், நூலகம் எரிப்பு, படுகொலைகள் உட்பட பல்வேறு சம்பவங்களுக்கு பொறுப்புகூறவேண்டிய நபர்தான் ரணில் விக்கிரமசிங்க. மத்திய வங்கிபிணைமுறிமோசடிகுற்றச்சாட்டும் உள்ளது. இப்படிபட்ட நபரை பாதுகாக்கும் விதத்தில் கருத்து வெளியிடுவது கவலையளிக்கின்றது.
நாட்டில் சட்டம் என்பது அனைவருக்கும் சமமானது. பலம் பொருந்தியவர்களுக்கு எதிராகச் சட்டம் செயற்படாது என்ற நிலை மாற்றப்பட்டுள்ளது. ரணில் விக்கிரமசிங்க மட்டும் அல்ல எப்படியான நபரும் சட்டத்துக்கு கட்டுப்பட்டே செயற்படவேண்டும். இந்த விடயத்தில் எவரும் விதிவிலக்கல்ல.
அதேவேளை, இந்தியாவில் இருந்து நாடு திரும்பும் இலங்கை அகதிகளுக்கு உரிய ஏற்பாடுகளைச் செய்துகொடுப்பதற்கு நாம் தயாராகவே இருக்கின்றோம்.
ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க ஆட்சிக்கு வந்து எதிர்வரும் 21ஆம் திகதியுடன் ஒரு வருடமாகின்றது. அதை முன்னிட்டு எதிர்வரும் முதலாம் திகதியில் இருந்து பல அபிவிருத்தி திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன. வடக்கில் இருந்துதான் அதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ளவுள்ளோம் - என்றார். (அ-எ-26)

## சைக்கிளில்...

வார். யாழ்ப்பாணத்தில் இருந்து வவுனியா நோக்கிப் பயணித்த கன்ரர் ரக வாகனம் எதிரே சைக்கிளில் வந்தவர் மீது மோதியது. இதனால் சைக்கிளில் பயணித்தவர் இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த நிலையில், மாங்குளம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டபோதும் உயிரிழந்தார்.
இந்த விபத்துச் சம்பவம் தொடர்பாகக் கனகராயன்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-எ-110)

## ரணில்...

ரணில் விக்கிரமசிங்கவின் கைது அரசாங்கத்தின் சர்வாதிகாரச் செயற்பாடு என்றும் அவை குற்றஞ்சாட்டியுள்ளன.
முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கைதுசெய்யப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து எதிர்க்கட்சிகளின் தலைவர்கள், பிரதிநிதிகள் கூட்டாக ஒன்றிணைந்து நேற்று கொழும்பில் ஊடக சந்திப்பொன்றை நடத்தினர். ஊடக சந்திப்பை முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆரம்பித்தார்.
சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்று கூறி அரசாங்கம் அரசியல் பழிவாங்கலை மட்டும் முன்னிலைப்படுத்திச் செயற்படுகின்றது. இன்று ரணில் விக்கிரமசிங்கவுக்கு நேர்ந்த கதி நாளை வேறொருவருக்கு ஏற்படலாம். அதனால் ஜனநாயகத்தையும், அரசமைப்பையும் பாதுகாக்க அனைவரும் அரசியல், கட்சி பேதமின்றி இணையவேண்டும் என்று எதிர்க்கட்சிகள் ஊடக சந்திப்பில் வலியுறுத்தின. முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைக் காப்பாற்ற அர்ப்பணிப்புடன் செயற்படுவோம் என்றும் எதிர்க்கட்சிகள் குறிப்பிட்டன.
முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன, தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம், தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவர் பழனி திகாம்பரம், ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவர் பாட்டலி சம்பிக்க ரணவக்க, ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தலதா அத்துக்கோரல, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம், நாடாளுமன்ற உறுப்பினர்களான தாவிந்த ஜயவர்த்தன, தயாசிறி ஜயசேகர, ரவி கருணாநாயக்க, நாமல் ராஜபக்ச, முன்னாள் அமைச்சர்களான சுசில் பிரேமஜயந்த, ஜீ.எல்.பீரிஸ், துமிந்த திசாநாயக்க, நிமால் சிறிபால டி சில்வா, டிரான் அலஸ், மஹிந்த அமரவீர, பவித்ரா வன்னியாராச்சி, அகிலவிராஜ் காரியவசம் ஆகியோர் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (அ-எ-இ)

## ரணிலின்...

தெரிவித்துள்ளார். வயது காரணமாக அவருடைய இரத்த அழுத்தம் சற்று அதிகமாக இருந்தால் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மட்டுமே அவர் தீவிர சிகிச்சைப் பிரிவுக்கு மாற்றப்பட்டுள்ளார் என்று தெரிவித்துள்ள பதில் பணிப்பாளர், அவர் ஆபத்தான கட்டத்தில் இல்லை என்று கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு அவர் தெரிவித்துள்ளார்.
ஆயினும், முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு நீர்ச்சத்துக் குறைபாடு ஏற்பட்டுள்ளது என்றும், அவரது உடலில் உள்ள குருதியில் மாற்றம் ஏற்பட்டுள்ளதை அவதானிக்கமுடிகின்றது என்றும் கொழும்பு தேசிய மருத்துவமனையின் பிரதி பணிப்பாளர் மருத்துவர் ருக்ஷன் பெல்லன தெரிவித்துள்ளார்.
முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நீதிமன்றத்தில் முன்னிலையாக முடியாத நிலை ஏற்படலாம். நீதிமன்றத்தில் பலமணி நேரம் காத்திருந்ததாலும், மின்சாரம் தடைப்பட்டதாலும், நீண்ட நேரம் நீர் அருந்தாமையாலும் நீர்ச்சத்துக் குறைபாடு அவருக்கு ஏற்பட்டுள்ளது.
அவரை மூன்று நாள்கள் கட்டாய ஓய்வில்வைத்து, நீர்ச்சத்துக் குறைபாட்டுக்கு சிகிச்சையளிக்கவேண்டும். அவ்வாறு சிகிச்சை அளிக்காவிட்டால், இதயப் பிரச்சினைகள், சிறுநீரகப் பிரச்சினைகள் மற்றும் பிற சிக்கல்கள் ஏற்படும் வாய்ப்புகள் உள்ளன என்றும் கொழும்பு தேசிய மருத்துவமனையின் பிரதி பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.
முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் உடல்நிலையைக் கருத்திற்கொண்டு, அரசியல்வாதிகள் மற்றும் நலன்விரும்பிகள் அவரைப் பார்வையிடுவதை மட்டுப்படுத்தவேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (அ-எ-இ)

## தெல்லிப்பழையில்...

தெல்லிப்பழை தவளைகிரி முத்துமாரி அம்மன் ஆலயத்துக்கு அருகில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடந்த விபத்தில் முதியவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
மரக்கறி வியாபாரத்தில் ஈடுபடும் அளவெட்டியைச்சேர்ந்த தியாகராசா சற்குணராசா (வயது-71) என்பவரே உயிரிழந்தவராவார்.
பட்டா ரக வாகனத்தைப் பின்புறமாகச் செலுத்தியபோது அதற்குள் அகப்பட்டே முதியவர் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்படுகின்றது. இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மேற்கொண்டார்.
பட்டா ரக வாகனத்தின் சாரதி பொலிஸாரிடம் சரணடைந்துள்ளார். சாரதியை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ-எ-26-20-27)

## ரணிலின்...

பட்டிருக்கவேண்டும். தற்போது கைதாகியுள்ள விடயம் ஒரு சிறிய பிரச்சினைதான் என்று தெரிவித்துள்ளார் அமைச்சர் பிமல் ரத்நாயக்க.
வவுனியா மாவட்டச் செயலகத்தில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றின்பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
ரணில் விக்கிரமசிங்கவின் கைது நடவடிக்கை அரசாங்க பழிவாங்கல் அல்ல. நாட்டு மக்கள் எமக்கு வழங்கிய ஆணைக்கு அமைய நாங்கள் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும் என்ற அடிப்படையிலேயே அது நடந்துள்ளது. இதற்கு எதிர்ப்பைத் தெரிவிக்கும் வகையில் குப்பைகள் அனைத்தும் ஒன்று சேர்ந்துள்ளன. ஆனால் அவர்களால் அரசாங்கத்தை ஒன்றும் செய்ய முடியாது. தேர்தலில் நின்று வெற்றிபெறமுடியாதவர்கள், மக்களால் தோற்கடிக்கப்பட்டவர்களே தற்போது ஒன்று சேர்ந்துள்ளனர்.
ரணிலின் காலத்திலேயே யாழ்ப்பாண நூலகம் எரியூட்டப்பட்டது, கறுப்பு ஜூலைக் கலவரம் இடம்பெற்றது. அந்தக் கலவரத்தால் பாதிக்கப்பட்ட தமிழ்மக்கள் வவுனியா, செட்டிகுளம் பகுதிகளுக்கு இடம்பெயர்ந்திருந்தார்கள். பட்டலந்த வதைமுகாம் அறிக்கை தொடர்பாக அனைவருக்கும் தெரியும். ஆகையால் அந்தக் காலப்பகுதியில்தான் இவரை கைதுசெய்திருக்க வேண்டும். இது சின்ன விடயம்தான். ஆனால் எதிர்காலத்தில் மத்திய வங்கியில் இடம்பெற்ற பிணை முறி ஊழல் தொடர்பாக மீண்டும் விசாரணைகள் ஆரம்பிக்கப்படும்.
ஊழல்வாதிகள், அரச பணத்தை மோசடிசெய்தவர்கள் மீது தொடர்ச்சியாக சட்டம் பாயும். நாம் அரசாங்கம் என்றவகையில் பொலிஸாருக்கு எந்தவிதமான அழுத்தத்தையும் கொடுக்கவில்லை - என்றார். (அ-எ-110)

## வெளிநாடுகளின்...

ளார். யாழ்ப்பாணத்தில் உள்ள தேசிய மக்கள் சக்தியின் மாவட்ட அலுவலகத்தில் நேற்று நடத்தப்பட்ட விசேட ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
இந்தியப் பிரதமர் மற்றும் மேற்குலக நாடுகளின் தலைவர்களின் அழுத்தம் காரணமாகவே ரணில் விக்கிரமசிங்க கொழும்பு தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று வெளியாகும் தகவல்கள் தொடர்பில் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு பதிலளித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
இது தொடர்பில் எனக்குத் தெரியாது. எமது நாட்டுச் சட்டத்தை மாற்றுவதற்கு உலக நாடுகளின் தலைவர்கள் தலையிடுவார்கள் என்று நான் நினைக்கவில்லை. இவ்வாறான கருத்துக்கள் உலக நாடுகளின் தலைவர்களை அவமதிக்கும் செயலாகும்.
ரணில் போன்றவர்கள் சட்டத்துக்கு மேலானவர்கள் என்ற விம்பம் உருவாக்கப்பட்டிருந்தது. ஆனால் சட்டம் அனைவருக்கும் சமம் என்பது தற்போது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
விளக்கமறியலில் உள்ளவர்களுக்கு நோய் ஏற்பட்டால் மருத்துவமனையில் சேர்க்கப்படுவது சாதாரண நடைமுறையாகும். ஆனால் ரணில், ராஜபக்சக்கள் அவ்வாறு செயற்படவில்லை, அரசியல் பழிவாங்கல்களில் ஈடுபட்டனர். இந்த விடயத்தில் நாங்கள் சட்டபூர்வமாகவே செயற்படுகின்றோம். பொலிஸ் மற்றும் சிறைச்சாலைத் திணைக்களம் என்பன சுயாதீனமாகச் செயற்படுகின்றன - என்றார். (அ-எ-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலங்கார உற்சவம்

கொடிகாமம் ஓக. 25

கோவிலாக்கண்டி திருவருள்மிகு மருதடி நாச்சிமார் திருக்கோவில் வருடாந்த அலங்கார உற்சவம் நாளை செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு அலங்கார உற்சவப் பூஜையுடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 6ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு 108 சங்காபிஷேகப் பெருவிழா நடைபெறும். அதனைத் தொடர்ந்து வசந்த மண்டபப் பூசையும் திரு வூஞ்சல் பராயணமும் முடிவுற்றதும் சுவாமி வீதியுலா வருகைதந்து அன்னதானம் வழங்கப்படும். (ச-25,159)

## மணல் விற்பனைக்கு

கட்டட வேலைகளுக்கு அரச அங்கீகாரம் பெற்ற பழுப்பு நிற மணல் விற்பனைக்கு உண்டு. கனரக வாகனங்களுக்கு யாழ். மாவட்ட வீதி அனுமதிப் பத்திரம் போட்டு தரப்படும்.(யாழ் மாவட்டத்திற்கு 55,000/= ரூபாய்)

தொடர்புகளுக்கு: 076 3249 977 077 4121 100

(CS 59178) A

## வீட்டுப்பணிப்பெண் தேவை

கல்வியங்காட்டுப்பகுதியில் 4 பேர் கொண்ட குடும்பத்திற்கு பகுதிநேர வீட்டுப்பணிப்பெண் தேவை. (மாலை நேரம்)

சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.

தொடர்பு : 077 712 4211

(CS 59224) E

## தென்னந் தோட்டக்காணி விற்பனைக்கு

பச்சிலைப்பள்ளி பளைப் பிரதேசத்தில் 20 ஏக்கர் வளமான தென்னைக்கு உகந்த காணி விற்பனைக்கு உண்டு. பிரித்து வழங்கப்பட மாட்டாது. ஏக்கர் 13 இலட்சம்.

தொடர்பு : Whatsapp : 0044 740 537 3526

(CS 59217) E



# பரிசளிப்பு நிகழ்வும் ஆண்டு விழாவும்

யாழ்ப்பாணம், ஓக.25

நல்லூர் சைவத்தமிழ்ப் பண்பாட்டுக் கலைக்கூடல் அமைப்பின் ஏற்பாட்டில் பரிசளிப்பு நிகழ்வும் ஆண்டு விழாவும் அமைப்பின் இணைத்தலைவரும், வடக்கு மாகாண முன்னாள் பிரதம செயலருமான இ.இளங்கோவன் தலைமையில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் இடம்பெற்றது. இதன்போது பண்பாட்டுக் கலைக்கூடல் மாணவர்களால் பண்ணிசை, கோலாட்டம் என்பன நிகழ்த்தப்பட்டதுடன் யாழ். வலிகாம வலயப் பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட கட்டுரைப்போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில்கள் வழங்கப்பட்டன. தொடர்ந்து பேராசிரியர். திருநாவுக்கரசு கமலநாதனின் 'பொழிலும் பொலிவும்' எனும் நூல் வெளியீடும் இடம்பெற்றது. நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன், யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் சா.சுதர்சன், பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலாளர் இ.த.ஜெயசீலன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் நா.சண்முகலிங்கன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ச-41-66)

# கூரை திருத்த முயன்றவர் தவறி வீழ்ந்து உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், ஓக.25

வீட்டின் கூரையைச் சீர் செய்ய முயன்ற இளைஞரொருவர் தவறி வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

கோப்பாயைச் சேர்ந்த சந்திரசேகரம் பிரணவன் (வயது-25) என்ற இளைஞரே உயிரிழந்தவராவார்.

கடந்த 11ஆம் திகதி மழை பெய்தபோது வீட்டில் ஒழுக்கு ஏற்பட்டுள்ளது. அதையடுத்து மறுநாள் வீட்டின் கூரையைச் சீர்செய்ய முயன்றபோது அவர் தவறிக் கீழே வீழ்ந்து படுகாயமடைந்துள்ளார்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவருக்குச் சிகிச்சை வழங்கப்பட்டு வந்தநிலையில் நேற்று அவர் உயிரிழந்தார்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-எ-26-131)

# மஹோற்சவம்

யாழ்ப்பாணம், ஓக.25

நெடியகாட்டுத் திருச்சிற்றம்பலப் பிள்ளையார் கோவில் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 29ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்குக் கணபதி ஹோமம் இடம்பெற்று நம்பியாண்டார் நம்பி சுவாமி ஊர்வலம் இடம்பெறும். நாளைமறுதினம் புதன்கிழமை மாலை விநாயகர் சதுர்த்தி உற்சவம் இடம்பெறவுள்ளது. தொடர்ந்து எதிர்வரும் செப்ரெம்பர் 3ஆம் திகதி வேட்டைத் திருவிழாவும் , 6ஆம் திகதி தேர்த் திருவிழாவும், 7ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. மஹோற்சவக் காலத்தில் பகல் திருவிழாவுக்கான வசந்தமண்டப பூசை காலை 10 மணிக்கும், இரவு திருவிழாவுக்கான வசந்தமண்டபப் பூசை இரவு 7 மணிக்கும் நடைபெறும். தேர்த்திருவிழாவுக்கான வசந்த மண்டபப்பூசை அன்றைய தினம் காலை 7 மணிக்கு நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-25,100)

## மரண அறிவித்தல்

தோற்றம் 06 . 07 . 1987



மறைவு 20 . 08 . 2025

### கென்ஸ்மன் ஜோதினி (டின்சி)

யாழ்ப்பாணம் குருநகரைப் பிறப்பிடமாகவும் இல-312 பாங்ஷால் வீதியை வதிவிடமாகவும் கொண்ட கென்ஸ்மன் ஜோதினி (டின்சி) கடந்த (20.08.2025) புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மத்தியாஸ் டில்லிக்குமார் - நசரேத்தம்மா தம்பதியரின் மகளும், வலன்ரைன் குரூஸ் - வலன்ரைன் குரூஸ் மலர் தம்பதியரின் மருமகளும், கென்ஸ்மனின் அன்பு மனைவியும், றீனா, கண்ணா, அம்மு, ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (25.08.2025) பிற்பகல் 02.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இருந்து எடுத்து செல்லப்பட்டு யாழ் மரியன்னை பேராலயத்தில் பிற்பகல் 03.00 மணியளவில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பின்னர் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்து செல்லப்படும் இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

இல-312, பாங்ஷால்
வீதி குருநகர்
யாழ்ப்பாணம்.

தகவல்: ஜெனிபர்
(கேபிள் ரீ.வீ உரிமையாளர்)
077 755 6499



பச்சிலைப்பள்ளிப் பிரதேச இந்துசமய அறநெறி மாணவர்களுக்கான தேசிய ஆக்கத்திறன் விருது 2025க்கான போட்டிகள் அண்மையில் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போது பேச்சாற்றல், கதாப்பிரசங்கம், நாடகம், நடனம், நீதிநூல் ஒப்புவித்தல், பண்ணிசையும் பஜனையும், வில்லுப்பாட்டு, சொல்லாடற்றிறன் ஆகிய போட்டிகள் இடம்பெற்றன. (ச-9)





இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 25.08.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org